Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily    தேசிய தினசரி

போன்· 389    தபால்பெட்டி எண் 49

மலர் ·    யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 5 ஆம் நாள்    துல்கஃதா 12    (18-4-62)    புதன்கிழமை    இதழ் 60




# ‘மொழி உரிமை பெறும் வரை ஓயமாட்டோம் தமிழ் மக்கள் தொடர்ந்து போராடியே தீருவர்’

## முற்றவெளி மைதானத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

“எங்கள் பிரதேசத்தில் எங்கள் மொழி அரசகரும மொழியாக வேண்டும். அதை அடையும்வரை நாம் பொறுத்திருக்க முடியாது. இதற்காகத் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம். நாம் ஒருமித்துப் பலமாக நிற்போமானால் வெற்றி எமதே. தமிழ்பேசும் மக்கள் அடங்கி ஒடுங்கிக் கிடக்கவில்லை. உயிரோடும், உணர்ச்சியோடும் அகிம்சா முறையில் அவர்கள் போராடுவார்கள்” என இன்று மாலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்போது குறிப்பிட்டார்.

“ஒரு வருடமாக கொடுங்கோல் ஆட்சியிலிருந்து மீண்டிருக்கிறோம். தமிழ்பேசும் மக்களை அடக்கிவிட்டோம் என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இல்லை என்று இன்று கூடியிருக்கும் கூட்டங்கள் எல்லாம் சொல்லுகின்றன.

அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார்கள். ஏன் செய்தார்கள்? தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் பிரதேசத்தில் தமிழ்மொழியே ஆட்சிமொழியாகவேண்டும் என்று ஒரே மனத்துடன் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தினார்கள். அந்த இயக்கத்தை இப்பொழுது அலசி ஆராய்வோம். மிக வெற்றிகரமாக முடிந்தது அந்த இயக்கம். கிட்டத்தட்ட இரண்டு மாதகாலமாக நடந்தது. இன்னும் எத்தனையோ மாதக்கணக்கில் நடத்துவதற்கு மக்கள் ஆயத்தமாகவிருந்தார்கள். உணர்ச்சி வேகம்மிகுந்து தமிழ்ப்பேசும் மக்கள் எல்லாம் தங்களுக்குள் பிளவின்றி எல்லோரும் ஏகமனதாக இயக்கத்தை நடத்தினார்கள். இளைஞர்களும், முதியவர்களும், ஆண்களும், பெண்களும், ஆசிரியர்களும், மாணாக்கர்களும், முதலாளிமார், தொழிலாளிமார்கள் ஆகிய அனைவரும் பங்குபற்றினார்கள். அரசியல்வாதிகள், அரசியலில் ஈடுபடாதவர்கள் சாதி வித்தியாசமின்றி எல்லா வகுப்பினரும் சத்தியாக்கிரகத்தை நடத்தினார்கள்.

தமிழ்பேசும் மக்களின் ஆழ்ந்த பண்பாட்டுக்கு இச்செய ஒரு ஈய்க்குத்தானும் நோவுண்டாக்காது, அஹிம்சையைக் கைப்பிடித்து இந்த நீடித்த இயக்கத்தை நிறைவேற்றினார்கள்.

அரசாங்கம் தன்னாலியன்ற வித்தைகள் எல்லாவற்றையும் உபயோகித்துப் பார்த்தது. இந்தச் சத்தியாக்கிரகத்தை நிற்பாட்டுவதற்கு ஒன்றும் வாய்க்கவில்லை. ஏனெனில் தமிழ்பேசும் மக்கள் ஏகோபித்து தம்முடனிருந்து பிரித்தெடுக்கமுடியாத மொழி உரிமைகளைக் கேட்டு நின்றார்கள். இந்தநிலையில் அரசாங்கம்செய்திருக்கவேண்டியது ஜனநாயக முறையின்படி ஒன்றேயொன்று தமிழ்பேசும்மக்களின் கோரிக்கைகளுக்கு இசைந்து அவர்களின் மொழியுரிமையைக் கொடுத்திருக்கவேண்டும் அதுதான் ஜனநாயகம். பலத்தை பலமில்லாதவர்களை அடக்கியாழ்வதல்ல ஜனநாயகம்.

இப்படியிருக்கும் நேரத்தில் அரசாங்கம், பலாத்காரத்தைப்

(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு கூட்டத்தில்

# திரு. ராஜதுரை எம்.பி. பேச மறுப்பு!

## பிரிவினை சக்திகளுக்கு திரு. ராஜமாணிக்கம் கண்டனம்

மட்டக்களப்பு, செவ்வாய்

தமிழரசுக்கட்சியின் ஆதரவில் மட்டக்களப்பில், திரு. எஸ். எம். ராஜமாணிக்கத்தின் தலைமையில் இன்று பெரியபொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு திரு. ராஜதுரை எம். பி., நகரசபைத் தலைவர் திசவீரசிங்கம், செனட்டர் மாணிக்கம், புரக்டர் சாம் தம்பிமுத்து, உலகசேகரம், கல்குடா எம். பி. மாணிக்கவாசகர் இவர்கள் வந்திருந்தனர்.

### ராஜதுரை மறுப்பு

திரு. எஸ். எம். ராஜமாணிக்கமும் மற்றும் பலரும் பேசியபின், கடைசியாக திரு. ராஜதுரை பேசுவார் என்று தலைவர் அறிவித்தார். உடன் திரு. ராஜதுரை ஒலிபெருக்கி முன்வந்து, “தந்தை செல்வநாயகம் உட்பட ஏனைய பாராளுமன்ற தமிழ் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டத்தில் நான் சில விஷயங்களைப் பேசவேண்டியவனாக இருக்கிறேன். அதன் பிறகுதான் எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசவிரும்புகிறேன். வணக்கம்” என்று சொல்லிவிட்டுத் திரும்பினார்.

அதன்பின் நன்றிகூறிய திரு பத்மநாதன், தமிழர்களிடையே பிரிவினை செய்யும் சக்திகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

திரு. ராஜதுரையிடம் பின் பலரும் சென்று, பொதுக் கூட்டத்தில ஏன் பேச மறுக்க வேண்டும் என்றும் கட்சியிலிருந்து பிரிந்துவிடக்கூடாதென்றெல்லாம் கேட்டனர். திரு. ராஜதுரை கருத்துவேற்றுமை கொண்டிருப்பதாயும், கட்சியிலிருந்து அவர் பிரியக்கூடுமென்றும் பலத்த வதந்திகள் உலவுகிறது.

பொதுக்கூட்டத்தில் தலைவர் திரு. எஸ். எம். ராஜமாணிக்கம் பேசுகையில், தமிழரின் ஒத்துழைப்பின்றி அரசாங்க நிர்வாகம் நடைபெற முடியாதென்பதைக் காட்டிவிட்டதாயும், தங்கள் உரிமைகளைப் பெறும்வரை, தமிழர் தொடர்ந்து போராடத் தயாரென்றும் கூறிவிட்டு, “தமிழரிடையே பிளவு ஏற்படுத்த சில பிரிவினை சக்திகள் மீண்டும் தலைதூக்குகின்றன. பிரதேசம் முதலிய காரணங்களைக் கூறி பிரிவினை செய்யும் முயற்சியைக் காண மனம் வேதனைப் படுகின்றது. ஆனால் இந்த சதிச் செயல்கள் உருப்படாது. வடக்கு, கிழக்கு மாகாணப் பாகுபாடு வேற்றுமைக்கு இடம் கொடுக்கமாட்டோம்” என்றார்.

# ‘உரிமை கிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்’

—மன்னார் எம். பி.

## மன்னாரில் நடந்த பொதுக்கூட்டம்

மன்னார், செவ்வாய்

“சத்தியாக்கிரகம் தோல்வியடைந்ததாக சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. எதிராளியின் மனதை மாற்றுவதுதான் சத்தியாக்கிரகத்தின் நோக்கம். உண்மை, அகிம்சை, தியாகம் இவற்றால் நமது பலத்தை நாம் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இரண்டு இலட்சம் மக்களுக்குமேல் சேர்ந்து நடத்திய சத்தியாக்கிரகம் அசம்பாவிதமெதுவுமின்றி நடந்துள்ளது உலகத்திலேயே இதுவரை நடவாதது.”

என்றிவ்வாறு திரு. எஸ். சுதிரவேற்பிள்ளை மன்னார் முற்றவெளியில் இன்று மாலை தமிழரசுக் கட்சியின் ஆதரவில் நடைபெற்ற பெரிய பொதுக் கூட்டத்தில் பேசுகையிற் குறிப்பிட்டார். நகரசபைத் தலைவர் திரு. கே. சு. பெர்னாண்டோ கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

மன்னார் எம். பி. யான திரு வி. ஏ. அழகக்கோன் பேசுகையில், “உரிமை கிடைக்கும்வரை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதாகவும், மனம் தளர மாட்டோம்” என்றும் கூறினார்.

ஜனாப் மசூர் மௌலானா பின்னர் பேசுகையில் முஸ்லிம்கள் தமிழுரிமைபெறும் இலட்சியத்தை முழுமனதுடன் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டார். திருவாளர்கள் ஏ. ஆர். ஜேம்ஸ், வி. கைலாசபிள்ளை, முதலியவர்களும் பேசியபின், எல்லாரும் சேர்ந்து “வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி” என்ற பாரதியாரின் பாடலை பாடியதுடன் கூட்டம் முடிவடைந்தது.

### இன்று

ரசிக ரஞ்சன சபையினரின் இசைவிழா, இன்று மாலை வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோவில் மூன்றலில் ஆரம்பமாகிறது.

—

கொழும்பு, செவ்வாய்

டோக்கியோவில் நடைபெற்ற கல்வி மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொண்ட திரு. பதியுதீன் முகமது இலங்கை திரும்பினார்.

நம்பிக்கையில்லா தீர்மானம்:

# மாநகரசபைக் கூட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

## சட்டப் பிரச்சினை குறுக்கிட்டது காரணம்?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம்பற்றி விவாதிப்பதற்கான விசேஷ கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமில்லையென்று திரு. ஏ. ஜி. இராசசூரியர் கிளப்பியசட்டப்பிரச்சினையைத் தொடர்ந்து சட்ட வல்லுனரின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு இக்கூட்டத்தை மறுதேதி குறிப்பிட்டு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 10-ம் திகதி மின்சார்ந்து நடத்துவதற்காக கூடிய கோளாறு காரணமாக ஒத்திவைக்கப்பட்ட மாநகர சபையின் விசேஷ கூட்டம் நேற்று மாலை மாநகரசபை ஆணையாளர் திரு. டி. டி. ஜயசிங்கா தலைமையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமான விவாதத்தைத் தொடங்கியது. அன்றைய கூட்டத்தில் திரு. பி. எம். ஜோன் பேச ஆரம்பித்தபோது கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டம் ஆரம்பமானபோது திரு. ஜோனைத் தொடர்ந்து பேசும்படி ஆணையாளர் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

முன்னள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் அ. தே. வேதாபரணமும் பாரியாரும் தமது புதல்வி ஒப்பில்லாமணிக்கும் முன்னை தலைமை ஆசிரியர் ஏழாலை வடக்கு திரு. தா. கனகையாவினதும் பாரியாரினதும் புதல்வன் ஜோண்கனகசிங்கத்திற்கும் (அரசினர் அளவையாளர்) 25-4-62 புதன்கிழமை பிற்பகல் 4-30க்கு வட்டுக்கோட்டை தேவாலயத்தில் நடைபெறும் திருமணத்திற்கும் அதன் பின் யாழ்ப்பாணக்கல்லூரி (வட்டுக்கோட்டை) மண்டபத்தில் நடைபெறும் விருந்து வைபவத்திற்கும் அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றூர்கள். தனிப்பட்ட முறையில் அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை. இதே தினம் காலை 9 மணிக்கு எங்கள் மகன் ஆனந்தராஜன் பட்டதாரி ஆசிரியர் (ஹைலன்ட்ஸ், ஹற்றன்) அவர்கட்கும் கந்தையா யோகேஸ்வரி பட்டதாரி ஆசிரியை (தர்மபாலவித்தியாசாலை, பனிப்பிட்டியா) அவர்கட்கும் ஏழாலை வடக்கிலுள்ள தேவாலயத்தில் திருமணம் நிகழும்.

அ. தே. வேதாபரணம்
வட்டுக்கோட்டை,
12-4-62.

### லொறி ஒப்பந்தம்

நாவற்குளி கிராம சபைப் பகுதி பல நோக்கக்கூட்டுறவுச் சமாசத்திற்கு லொறிமூலம் பொருள்களை ஏற்றி இறக்க விண்ணப்பங்கள் 30 - 4 - 62ந் திகதிவரை ஏற்கப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 10/- (பத்து) கட்டி சமாசக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சி. சுந்தரம்
கௌரவ காரியதரிசி.

### புதுவருஷ அறிவிப்பு
### இட மாற்றம்

ஃபிரான்லிறேட் சோமா ஹாட்வயர் ஸ்ரோரில் முன் மனேஜராகக் கடமையாற்றிய திரு. சி. கு. வேலுப்பிள்ளை அவர்கள் தற்போது யாழ்ப்பாண ஹாட்வயர் ஸ்ரோரில் பங்காளியாகச் சேர்ந்து வியாபாரம் நடத்துகிறூர். அவருடைய அன்பு மிகுந்த நண்பர்கள் யாவர்க்கும் இந்த அறிக்கையை அறிவிக்கிறேம். கட்டிடங்களுக்குவேண்டிய சகல விதமான பொருட்களை நிதானமான விலையில் விநியோகஞ் செய்யும் மேற்படி நிலையத்திற்குத் தாங்கள் சமுகந் தந்து தங்கட்கு வேண்டியனவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

இங்ஙனம்
யாழ்ப்பாண ஹாட்வயர் ஸ்ரோர்
10/4 ஃபிரான்லிறேட்,
யாழ்ப்பணம்.

### தேவை

மாணவத் தாதிமார் தேவை. விண்ணப்பஞ் செய்வோர் விண்ணப்பத்துடன் தராதரப் பத்திரம், நற்சாட்சிப் பத்திரம் இவைகளின் பிரதிகளை மாத்திரம் அனுப்பவேண்டும். விண்ணப்ப முடிவுத் தேதி 25-4-62.

காரியதரிசி,
கூட்டுறவு ஆஸ்பத்திரி
மூளாய்,
சுழிபுரம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநாதர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டுசித்திரைத் திங்கள் 5-ம் திகதி புதன் கிழமை (18-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, ஜூல்கஃதா மாதம் 12-ம் பிறை.

இன்று இரவு 4-54 வரை சதுர்த்தி. பின்னர் பூரணை. பின்னிரவு 5 மணிவரை அத்தம். பின்னர் சித்திரை. சித்த யோகம். இராகுகாலம் 12-03 முதல் 1-33 வரை. பகவத் பிரார்த்தனையிலீடுபடுக.

இன்று திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

அத்தம்—சித்திரை: இவர்களுக்குத் தொழிலில் மனவெறுப்பு, பணமுடை, கடன்வரவு தாமதம், வித்தைச்சிறப்பு, வாக்குவன்மை ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்பாதம்முடிய) இவர்களுக்கு தொழிற்சிறப்பு, தைரியம், குடும்பநலக்கேடு, இன்பசிந்தனை, பணமுடை நீக்கம், தொழில் ஆதாயம் ஆகியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இவர்களுக்கு கடன்தொல்லை நீக்கம், பணவரவு, உறவினரால் இடர் நல்லோர் சேர்க்கை, நண்பர் ஆதரவு ஆகியன காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால் முடிய) இவர்களுக்கு நல்லோர் தரிசனம், தொழில் ஆதாயம், நற்செய்தி கேட்டல், முதியோர் நினைவு, பெண்கள் தொல்லை ஆகியன காணப்படுகின்றன.

கடகம்: (புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய) இவர்களுக்கு அலைச்சல், அகால உணவு, நண்பர்சேர்க்கை, மதிப்புயர்ச்சி, பெரியவர் பகை, பிறரை அலட்சியம் செய்தல் ஆகியன காணப்கடுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தராடம் முதலாம்பாதம்முடிய) இவர்களுக்கு பிதாவழி உதவி, குடும்பசந்தோஷம், வைத்தியச் செலவு அதிகரிப்பு, நோய்க்கஷ்டம், நல்லவர் உதவி ஆகியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரைமுடிய) இவர்களுக்கு இன்று இனசனக் கொண்டாட்டம், விருந்து, பணமுடை, தொழில் வெறுப்பு, கடும் உழைப்பு, நல்லோர் நட்பு ஆகியன காணப்படுகின்றன.

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) இவர்களுக்கு வித்தையுயர்ச்சி, பிறரால் மதிப்பு, குடும்பசுகம், சுபகரும முயற்சி, குழந்தைப்பேறு, ஊழியர் இடர் ஆகியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இவர்களுக்கு செய்காரியத்தடை, மனக்கவலை, தொழிற்சிறப்பு, நல்லோர் உதவி, சகோதரர் விரோதம், பொருட்கேடு ஆகியன காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம், உத்தராடம் 1ம்பாதம் முடிய) இவர்களுக்கு தொழில்உதவி, வியாபாரச் சிறப்பு, புதியமுயற்சி பலிதம், நம்பி ஏமாற்றமடைதல், சந்தோஷம் ஆகியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம்பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய) இவர்களுக்கு இன்று குடும்பசந்தோஷம், கலைப்பயிற்சி, ஊழியர் இடர், பணமுடை, மாதாவழி உதவி ஆகியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம், பின்னரை, சதயம், பூரட்டாதி முன்கால் முடிய) இவர்களுக்கு இன்று குடும்பநலம், சுபகரும முயற்சி, நற்கருமத்தால் செலவு, அலைச்சல், இன்பசிந்தனை ஆகியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய) இவர்களுக்கு உடல் நலக்குறைவு, வைத்தியச் செலவு, சந்தோஷம், கலைப் பயிற்சி, வித்தைச்சிறப்பு, பணவரவு தடை, குடும்பக்கஷ்டம் ஆகியன காணப்படுகின்றன.

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள கறுப்பு A 50 Cambridge விற்பனைக்குண்டு.

பார்வையிடம்:
48, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

## துப்பாக்கி சூட்டுக்கு ஒருவர்பலி

கல்முனை, செவ்வாய்

களுவாஞ்சிக்குடி என்ற இடத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகமென்றில், ஒருவர் மரணமானுரென்றும் அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## பருத்தித்துறை பொலிசார் நடத்திய விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விழாக் கொண்டாட்டம் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. வான்சான்டின் தலைமையில் நடைபெற்றது.

தாச்சி, குண்டெறிதல், சைக்கிள் ஓட்டம், மற்போர், கயிறிழுத்தல், கைப்பந்தாட்டம், தூர ஓட்டம் முதலான பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்கட்கு பொலிஸ் அதிபரின் பாரியார் திருமதி வான்சாடின் விலை உயர்வான பரிசில்களையும் வெற்றிக்கேடயம் வெள்ளிக் கிண்ணங்கள் ஆகியவைகளையும் வழங்கினர்.

மேல், கீழ் பிரிவு கைப்பந்தாட்டப் போட்டுகளில் முறையே பருத்தித்துறை கோல்டின் பிளாஸ் கோஷ்டியும், இராஜன் விளையாட்டுக் கழகக் கோஷ்டியும் சாம்பியன்களாகி வெற்றியை ஈட்டின.

கயிறு இழுதத்ல் இறுதிப் போட்டியில் சுப்பர்மடம்கோஷ்டியும் சென்தோமஸ்கோஷ்டியும கலந்து கொண்டன. பார்வையாளர்களே அளவு கடந்த ஆரவாரம் செய்யும் அளவுக்கு போட்டி விறுவிறுப்பை அடைந்ததுடன் இரு பகுதியிலும் வீரர்கள் சிலர் மடங்கி விழுந்தனர்.

இறுதியில சுப்பர் மடவீரர்கள் வெற்றியீட்டினர்.

3மைல் ஓட்டப் போட்டியில் நாகர் கோவிலைச் சேர்ந்த பி. நாகமுத்து முதலாவதாக வெற்றிபற்றூர். அவருக்கு பெற்றேல் மார்க்கலாம்பு ஒன்று பரிசளிக்கப்பட்டது. 50 மைல் சைக்கிள் வீரர் திரு. இராமநாதனுக்கு கைக்கடிகாரமும் இரண்டாவது வீரரான (அரசாங்க நில அளவையாளர்) திரு. வீரபத்திரமகா தேவாறக்கு வெள்ளித்தட்டு குத்து விளக்கு முதலானவைகள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

### பிரிட்டன் மறுப்பு

லண்டன், ஏப். 17

ஜோர்டானில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இறங்கியுள்ளதாக வெளி வந்த செய்தியைப் பிரிட்டன் நேற்று மறுத்தது.


# ப்ரோட்டீன் இன்றி உங்களை நீங்களே எரித்துக் கொள்வானேன்!




ப்ரோட்டீன் என்ற பொருளை உங்கள் தேகம் தினமும் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டு பண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. ஆனல் உங்கள் தேகத்தில் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. எனவே தினமும் நீங்கள் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ளவேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.

ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்டஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல் சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும் நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரணசக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.

**ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.**




## ப்ரான்ட்ஸ்

**எஸன்ஸ் ஓப் சிக்கன்**

AT-7/62

மேற்கு இரியான்

# அமெரிக்கயோசனையை டச்சு ஏற்கவில்லையாம்

ஜாகர்த்தா, ஏப். 17

இந்தோனேஷியாவின் பொருளாதார நிலைமை பற்றி தமது வெளி விவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோவுடன் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ ஆலோசனை நடத்தினர். மேற்கு இரியான் பற்றியும் இருவரும் ஆராய்ந்தனர்.

மேற்கு இரியான் விடுதலை நடவடிக்கை காரணமாக இந்தோனேஷியாவில் பொருளாதாரநிலைமை சிறிது கஷ்டமடைந்துள்ளதென்றும் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துவதற்கு டச்சு அரசாங்கம்முயற்சி செய்ததாகவும் டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

மேற்கு இரியான் சம்பந்தமாக தனது அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்திவிட்டு அமெரிக்காவிலுள்ள டச்சு ஸ்தானிகர் வாஷிங்டனுக்குத் திரும்பியுள்ளார்.

மேற்கு இரியான் நிலைமைக்கு அமெரிக்கா தெரிவித்த சமரச யோசனையை டச்சு அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாக முன்னர் வெளி வந்த செய்தியை அமெரிக்க அதிகாரிகள் இப்பொழுது மறுத்துள்ளனர்.

# இரகசிய ராணுவத்தில் பிரஞ்சு மாஜிப் பிரதமர்

## அல்ஜீரியாவில் 53பேர் மாண்டனர்

அல்ஜியர்ஸ், ஏப். 17

அல்ஜீரியா முழுவதிலும் நேற்று நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் 23 பேர் மாண்டனர்.

இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜெனரல் ஜோஹாட்டுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஓரானில் நேற்று நடைபெற்ற வேலைநிறுத்தத்தினல் ஓரானுக்கும் அல்ஜீரியர்சுக்குமுள்ள தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன.

இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் தலைவர் ஜெனரல் சலான் நிறுவியுள்ள தேசிய சபையின் தலைவராக பிரான்சின் முன்னைள் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அல்ஜீரியாவில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் சில தெரிவித்தன.

பிரான்சின் மாஜிப் பிரதமர் சில தினங்களுக்கு முன் திடீரெனத் தலைமறைவானர். அவர் சுவிட்சர்லாந்துகுச் சென்றிருக்கக் கூடுமென்று கூறப்பட்டது.

## கோவாவுக்கு லெப்டினன்ட் கவர்னர்

புதுடில்லி, ஏப். 16

கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளில் ராணுவ ஆட்சி முடிவடைந்ததும் லெப்டினன்ட் கவர்னர் ஒருவர் அங்கு நியமிக்கப்படுவார் என்று வெளிவிவகார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கோவா மக்கள் வேறு விதமாகத் தீர்மானித்தாலன்றி

கோவா மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலேயே இருந்துவரும் என்று அவர் கூறினர்.

இந்தியசட்டங்களுக்கும்போர்க்சுக்கல் சட்டங்களுக்கும்உள்ள வேறுபாடுகளை பரிசீலனைசெய்வதற்கு சட்ட நிபுணர் ஒருவர் கோவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

# வாதநோய் மருந்தை கொண்டு வர தாமதம் ஏற்பட்டதேன்?

## இரு இலங்கை விமானங்கள் பற்றி விசாரணை

கொழும்பு, செவ்வாய்

கடந்த வாரம் புதுடில்லியிலிருந்து ஏராளமான இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்துகளைக் கொண்டுவந்த இரண்டு இலங்கை கடற்படை விமானங்கள், குறிப்பிட்ட தினத்தில் இலங்கை வந்து சேராமல் ஒரு நாள் தாமதித்து வந்தது குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணையொன்றை நடத்துகிறது.

புதுலில்லியிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் அனுப்பியிருந்த ஒரு அறிக்கையைத் தொடர்ந்தே இவ்விசாரணை நடைபெறுகிறது.

கடந்த திங்கட்கிழமை மாலை வாதநோய் தடுப்பு மருந்துகளை, சோவியத் யூனியன் புதுடில்லிக்கு விமானமூலம் அனுப்பி வைத்தது. இம்மருந்துகளை புதுடில்லியிலிருந்த இலங்கை கடற்படை விமானங்கள் உடனடியாக இங்கு கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனல், இந்த விமானங்கள செவ்வாய்க்கிழமை தான் புதுடில்லியை விட்டுப் புறப்பட்டன.

ஹைகமிஷனர் காரியாலய அதிகாரிகள் இது பற்றித் தெரிவிக்கையில் வாதநோய் தடுப்பு மருந்துகள் அனுப்புவதில் ஏற்பட்ட இத்தாமதத்தினல் புதுடில்லி விமான நிலையததில் விசேஷ குளிர்சாதன வசதிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், உடனடியாக ஒழுங்குகள் எதுவும எடுக்கப்படடிராவிடில் ரஷ்யாவின் 4 0,0 0 'டோஸ்' மருந்துகளும் இலங்கைக்கு வந்தடையும்பொழுது கெட்டுப் போயிருக்கும் என்றும் கூறினர்.

## அலகாபாத் சம்பவம்

### விசாரணை நடத்த கோரிக்கை

அலகபாத், ஏப்ரல் 16

சென்ற சனிக்கிழமை அலகபாத் பொலிஸ் நிலையத்துக்கு முன்னல் நிகழ்ந்த கலகம் சம்பந்தமாக இதுவரை 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அப்பகுதியில் 24 மணிநேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட இப்பொழுது அங்கு அமைதி நிலவுகிறது.

சனிக்கிழமைநடைபெற்ற கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று கம்யூனிஸ்கட்சித் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனும் மற்றும் சிலரும் கோரியுள்ளனர்.

## உணவுப் பொருள ஏற்றுமதி

### ஐ. நா. உணவு கமிட்டி திட்டம்

நியூயோர்க், ஏப். 17

மேலதிக உணவுப் பொருள்களுள்ள நாடுகளிலிருந்துஉணவுப் பொருள்கள் பற்றுக்குறையாக உள்ள நாடுகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும். 3 கோடி 60 லட்சம் பவுண் ஸ்டர்லிங் திட்டமொன்றை ஐ. நா. உணவு விவசாயக் கமிட்டி ஏற்றது.

29 அம்சங்களைக் கொண்ட இத்திட்டந்தினல் இலங்கை போன்ற நாடுகள் பெரும் பயனடையுமென்று இலங்கைப் பிரதிநிதி திரு. வி. மகேந்திரன் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## தொல்புரம் கோஷ்டி வெற்றி

தொல்புரம், திங்கள்

தொல்புரம் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும், வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே சமீபத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

சிநேகபூர்வமான இப்போட்டி தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

## ஒலிவர் தோல்வி; சுந்தரர்...!

"ஒலிவர் படுதோல்வி அடைந்த விஷயத்தில் நான் ஒருபோதும் வெந்றியடையப் போவதில்லை என்பது தான் அவர்கள் எண்ணம்."

"சுந்தரர் இங்கிலாந்து போகிருர்; பெருங்கவலை அடைவார்; திரும்பி எம்முன் வருவார்; எனினும் புத்தி பெறுவார்" இப்படி ஒருவர் கூறினர்.

விளங்கவில்லையா?

பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் எழுதும் "ஈழப்பாட்டனின் கடிதங்கள்" விளக்கம் தரும். 22-4-62 ஞாயிறு 'ஈழநாடு' பத்திரிகையைப் பாருங்கள்.

# கருவாட்டு வியாபாரிகள் பற்றி உணவு மந்திரி

எட்டியாந்தோட்டை, திங்கள்

"பெட்ரோல், கருவாடு ஆகியற்றின் விற்பனவு உரிமைமைகள் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் சுமார் 2 கோடி ரூபாய் இங்கிருந்து தடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் வியாபாரம் நடத்திய அந்நியர்களுக்கு எதுவித தேசபிமானமும் கிடையாது. எந்த அளவுற்கு லாபமடிக்கலாமோ அந்தளவிற்கு லாபமடித்துப் பணத்தைத் தத்தம் நாடுகளுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பதே அவர்களின் ஒரேயொருகொள்கையாக இருந்தது."

இவ்வாறு வர்த்தக உணவுக் கபபல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன எட்டியாந்தோட்டையில் புதிதாக நிறுவப்பட்ட கூ. மொ. வி. கிளை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர். வைபவத்துக்கு டாக்டர் என். எம். பெரேரா தலைமை தாங்கினர்.

திரு. இலங்கரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது "நாட்டின் தேவைகளில் நூற்றுக்கு 20 வீதத்தை மட்டுமே அரசாங்கம் முன்னர் இறக்குமதி செய்தது. புறக்கோட்டையிலுள்ள தனிப்பட்ட வியாபரிகள் 80% வீதத்தை இறக்கும்தி செய்தார்கள். இந்தத் தனிப்பட்ட வியாரிகள் அன்னியர்களாகையால் அவர்களுக்கு எவ்வித தேசாபிமானமுமிருக்கவில்லை. பத்திரிகைகளும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கே தமது விளம்பரங்கள் மூலம் உதவி செய்தன."

டாக்டர் என் எம். பேசுகையில் யட்டியாந்தோட்டைப் பகுதியில் மக்கள் வங்கிக் கிளையொன்றையும் திறந்து வைக்கவேண்டும் என யோசனை தெரிவித்தார்.

# படைகுறைப்பு மகாநாட்டில் நடுநிலைமை நாடுகளின் முயற்சி

## வெற்றியளிக்கும் அறிகுறி

ஜெனிவா, ஏப். 17

ஜெனிவாவில் நடைபெறும் 17 நாடுகளின் படை குறைப்பு மகாநாட்டில் அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் சம்பந்தமாக கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையில் தோன்றி உள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு நடுநிலைமை நாடுகள் சமர்ப்பித்துள்ள புதிய திட்டத்தை படைகுறைப்பு மகாநாடு இன்று பரிசீலனை செய்கிறது.

அணு ஆயுத பரிசோதனை மேற்பார்வை சம்பந்தமாகத் தோன்றியுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு நடுநிலைமை நாடுகள் சமர்ப்பித்த புதிய திட்டத்தை 'சமரசம் காண்பதற்கு மனப்பூர்வமாக எடுக்கப்பட்டுள்ள ஒரு பெரிய முயற்சி' என்று மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள சோவியத் பிரதிநிதி கூறினர்.

நடுநிலைமை நாடுகளின் திட்டத்தின் விபரங்களை விரிவாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று பிரிட்டனும் அமெரிக்காவும் தெரிவித்தன.

புதிய சமரசத் திட்டத்தை இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடுமென்று மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

# "சனசமூகநிலையங்களின் கையில் கிராம வளர்ச்சிஉள்ளது"

## 11 வது ஆண்டுவிழாவில் முதலியார் தியாகராசா பேச்சு

நவாலி, திங்கள்

"இன்றைய கிராமங்களின் வளர்ச்சி பெரும்பாலும் இது போன்ற நிலையங்களின் கையிலே தான் தங்கியுள்ளது. சிறிய அளவிலே செய்யும் சேவையே கிராமத்துப் பொருளாதார, சமுதாய கலாச்சார விஷயங்களில் பெருமளவு முன்னேற்றங்களைக் கொண்டு வரலாம்" என்று நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தின் 11 வது ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில் அரசவாசல் முதலியார் சி. தியாகராசா குறிப்பிட்டார்.

விழா, நிலையத் தலைவர் திரு. வ. சண்முகம் தலைமையில் ஆரம்பமானது. மாணவிகள் நிலையகீதம் பாடினர்கள். செயலாளர் திரு. அ. மகாலிங்கம் தனது அறிக்கையில் நிலையம் வளர்ந்த வரலாறு, அதன் சேவைகள், அதன் தேவைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டார்.

மானிப்பாய்க் கிராமசபைத் தலைவர் திரு. வ. க. கணேசவேல் பேசுகையில், நிலையங்கள் கிராமத்தின் வளர்ச்சியில் பெருமளவு பங்குகொள்ளலாமென்றும். ஆக்கபூர்வமான வேலைகள் அனைத்திற்கும் கிராமசபையின் ஆதரவு பூரணமாய் உண்டென்றும் குறிப்பிட்டார். பண்டிதர் சோ. இளமுருகனர் பேசுகையில்; நிலையங்கள் நமது நாட்டின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் வளர்த்து இன்றைய போலி நாகரிகத்தின் விபரீத விளைவுகளிலிருந்து இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

ஆசிரியர் சி. ஜே. இளைய தம்பி பேசுகையில் நிலையங்கள் கிராமப் பொருளாதார ஸ்தாபனங்களாக விளங்க வேண்டுமென்றும், கிராமத்தின் தேவைக்குப் பலபொதுப் பணிகளில் ஈடுபட வேண்டுமெனவும் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. உ. ந. தேவகடாட்சம் பேசுகையில் நிலையத்தின் வளர்ச்சியைப் பாராட்டி சாதி சமய பேதமின்றிச் சனசமூக நிலையங்கள் சேவை செய்தால் நாட்டிலே சகோதரத்துவம் நிலவுமெனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் அ. மு. சாமுவேல், ஆசிரியர் ஐ நாகநாதன், வே. சிற்றம்பலம் ஆகியோரும் பேசினர்.

## சட்டவிரோத மதுபானத்துக்கு ஆதரவு!

நாவலப்பிட்டி, திங்கள்

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் மதுபானங்களுக்கு இங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் அமோக ஆதரவை அளித்துள்ளனர். காலத்துக்குக் காலம் மதுபானங்களின் பெயர்களும் மாறிவருகின்றன. தற்போது, 'வடிவேலு' பெயருடன் விளங்கும் சட்டவிரோத மதுபானம முன்னணிவகிக்கிறது?

## பிரிட்டன் நிராகரிப்பு

லண்டன், ஏப். 17

தென் வியட்நாமின் உள்நாட்டு விவகாரங்களில தலையிடவேண்டாமென்று அமெரிக்காவை இந்தோசீனவிவகாரங்களின் சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைவர்களான சோவியத் யூனியனும் பிரிட்டனும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சோவியத் யூனியன் விடுதத வேண்டுகோளை பிரிட்டன நிராகரித்துவிட்டது.

## புங்குடுதீவில் முத்தமிழ் விழா

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவு முத்தமிழ் மன்றத்தினர் வரும் 27 ம் திகதி முதல் 30 ம் திகதிவரை முத்தமிழ் விழாவொன்றை நடாத்த ஒழுங்கு செய்துள்ளனர்.

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ஈழத்திலுள்ள கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் ஆகிய பலரும் கலந்துகொள்வார்கள்.

சிவாவின் "நீதியே நீ ஒன்று கேள்" என்ற நாடகம் உட்பட நான்கு நாடகங்கள் நான்கு நாட்களிலும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## மணி வாக்கு

உலகிலே இருசக்திகளுண்டு. வாளும், ஆத்மீகமும். ஆத்மீக சக்தியே வாளை ஒவ்வொரு முறையும் வென்றுள்ளது. யுத்தத்திலும் கூட, ஒழுக்க முறையே, படைப்பலத்தை விட மூன்று மடங்கு முக்கியமாகும்.

— நெப்போலியன்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம். சுபகிருது ஆண்டு சித்திரை மீ 5உ (18-4-62)


## கண்டிப்பான நடவடிக்கை

உப்பு, கருவாடு, புளி முதலிய அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துள்ளவர்கள்மீதும் கொள்ளை அடிப்பவர் மீதும் அரசாங்கம் இனி அதிக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்போவதாக ஒரு செய்தி கூறுகின்றது. ஏற்கெனவே கொழும்பு முதலிய இடங்களிலே பல கடைகள் திடீரெனச் சோதனை போடப்பட்டு, அங்கு பதுக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இனி இவ்விதம் பதுக்கிவைத்துள்ள வர்த்தகர்மீது வர்த்தக லைசன்ஸ் சட்டப்படி தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, லைசன்ஸும் ரத்துச் செய்யப்படலாமென்றும் கூறப்படுகிறது. தங்கள் நன்மைக்காக எடுக்கப்படும் இவ்வித நடவடிக்கைகளைப் பொது மக்கள் வரவேற்பார்கள்.

ஆனால் கடுமையான நடவடிக்கைகளால் மட்டும், மக்களுக்கு நியாயமான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிடைத்துவிட முடியாது. சட்டியில் இருந்தாலே அகப்பையில் வரும். வெளி நாடுகளிலிருந்து தாராளமாக இறக்குமதியாகிவந்த புளி, வெல்லம் முதலிய சரக்குகளுக்குத் திடீரெனத் தடை போட்டதால், அப்பொருள்களுக்குப் பஞ்சமேற்பட்டது. கருவாடு இறக்குமதி உரிமையை அரசாங்கமே எடுத்துக்கொண்டதாலும் தனிப்பட்டவர்கள் வரவழைக்க முடியாமற் போனதாலும் இவ் விஷயத்திலும் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. உள் நாட்டில் உப்பு உற்பத்தி திடீரெனக் குறைந்ததால் உப்புப் பஞ்சம் ஏற்பட்டது. இப்பொருள்களை அதிகம் இறக்குமதி செய்ய முயற்சிகள் செய்வதுடன், உள் நாட்டிலும் இவற்றை உற்பத்தி செய்ய கூடுமான உதவிகளையும் அரசாங்கம் அளித்தாலே, இப்பொருள்களுக்கான பஞ்சம் நீங்கவும், மக்கள் தாராளமாக இவற்றைப்பெற முடியவும் கூடும்.

விலைக்கட்டுப்பாட்டுஅதிகாரிகள் பற்றியும் சில புகார்களுண்டு. அவர்கள் அனைவரும் தாமதேவதைகளல்லர். ஆகவே இவ்விஷயமாக அவர்களையே நம்பி இருக்கக்கூடாது. பொது மக்களின் பூரண ஒத்துழைப்பிருந்தாலே நிலைமை மேம்பட முடியும்.

## 13 கொலைகள்

இம்முறை புதுவருடப் பிறப்பன்று 13 கொலைகளும் பல கத்திக்குத்துகளும் நடந்துள்ளனவாம். இதற்குக் கள்ளச் சாராய குடிவெறியே காரணமென்று பொலிசார் தெரிவித்ததாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. கள்ளச்சாராயம் மட்டுமல்ல, சட்டபூர்வமான சாராயமும் அதிகமாக உட்கொண்டால் வெறி ஏற்படுத்தும். அந்த வெறியில் புத்தி தடுமாறி, எதுவும் செய்துவிடக் கூடும்.

புதுவருடம் போன்ற பெருநாட்களிலும், விவாகம் முதலிய கொண்டாட்டங்களிலும் மதுபானம் செய்வது ஒரு பழக்கமாகச் சிலரிடையே ஏற்பட்டுவிட்டது. இந்தக் கூடாத பழக்கத்தால், விளையும் தீங்குகள் பலப்பல. சமூக நன்மையில் நாட்டமுள்ளவர்கள், இத்தீய பழக்கத்தை ஒழிக்கத் தீவிரமாக முற்பட வேண்டும். இவ்வித புனிதமான பெருநாட்களை மகிழ்ச்சியுடன் மேலான முறையில் கொண்டாட நல்ல மாற்றுவழி காட்டி உதவவேண்டும். இதை வெற்றியுடன் செய்து வழிகாட்டுபவர் மேலானதோர் சமூக சேவை செய்பவர்களாவர்.

# இந்திய ஜனாதிபதி

## தேர்ந்தெடுக்கப்படும் முறை

(வ. மகாதேவன்)

இந்தியாவில் புதிய ஜனாதிபதியும், உபஜனாதிபதியும் 13-5-62இல் பதவியேற்பதற்கு இருப்பதால் இப்பதவிகளுக்குரியவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பதை இக்கட்டுரை விளக்கிக் கூறுகிறது.

இந்தியக் குடியரசின் தலைவர் ஜனாதிபதி. இந்தியக் குடியரசின் அரசாங்கத் தலைவர் பிரதம மந்திரியும் அவருடைய மந்திரிசபையுமாகும் பிரிட்டனிலுள்ள மகாராணியாரைப் போல் இந்திய ஜனாதிபதியும் பெயரளவில் நாட்டிற்குத் தலைவராக இருந்து பிரதமமந்திரியின் ஆலோசனைப்படி கடமையாற்றி வருவதைக் காண்கிறோம்.

### போட்டியிடத் தகுதியுடையவர்கள்

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட விரும்புபவர் எவருக்கும் பின்வரும் தகுதிகள் இருக்க வேண்டும்:- (1) இந்தியப் பிரஜையாகவும் 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். (2) இந்தியாவின்மத்திய(யூனியன்)பாராளுமன்ற கீழ்ச்சபையாகிய லோக் (மக்கள்) சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு சகல தகுதிகளும் உடையவராய் இருக்க வேண்டும். (3) இந்திய அரசாங்கத்திலோ அல்லது ஒரு இராச்சிய (மாகாண) அரசாங்கத்திலோ வருமானம் கிடைக்கும் பதவி வகித்துவராத ஒருவராக இருக்க வேண்டும். இந்த நிபந்தனை மகாண தேசாதிபதி, மத்திய அரசாங்க மந்திரி, மாகாண அரசாங்க மந்திரி ஆகிய பதவிகளை வகித்துவருபவர்களுக்குப் பொருந்தமாட்டாது.

### தேர்தல் முறை

இந்திய ஜனாதிபதி மக்களினால் நேர்முகமாக தெரிந்தெடுக்கப்படுவதில்லை. இந்திய மத்திய பாராளுமன்றத்திலுள்ள இருசபைகளிலும் (லோக்சபை, ராஜ்யசபை) பல்வேறு இராச்சியங்களில் மாகாணங்களில் உள்ள சட்டசபைகளில் (இருசபைகளிருந்தால் கீழ்ச் சபைகளில்) உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட (நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர்கள் நீங்கலாக) ஒரு தேர்தல் கழகம் (Electoral College) விகிதசமப் பிரதிநிதித்துவ தனிமாற்று வாக்குமுறையில் (Proportional Representation with single transferable vote) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்.

### வாக்குகளின் எண்ணிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் மாகாணங்களுக்கு ஒரேவித பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த ஒவ்வொரு அங்கத்தவரும் போடக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டிய விதம் அரசியல் திட்டத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது. இந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தில் தனித்தனியே கணக்கிடப்பட வேண்டும்.

ஒரு மாகாணத்தில் (அல்லது இராச்சியத்தில், உள்ள சனத்தொகையை அந்த மாகாண கீழ்ச் சட்டசபையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கையால் வகுத்து கிடைக்கும் தொகையில் எத்தனை ஆயிரம் இருக்கின்றனவோ அத்தனை வாக்குகளை ஒவ்வொரு அங்கத்தவரும் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கலாம். ஆயிரத்தால் பிரிக்கும்பொழுது மச்சம் 500க்குக் குறையாமல் இருக்குமானால் மேற்கொண்டும் ஒரு வாக்கு அளிக்கலாம்.

பின்வரும் உதாரணம்இதை தெளிவுபடுத்தும். ஒரு மாகாணத்தின் மொத்த சனத்தொகை 3,01,68,000 என்றும் அந்த மாகாண (கீழ்ச்)சட்டசபையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 300 என்றும் வைத்துக் கொள்வோம். சனத்தொகையை அங்கத்தவர்களின் எண்ணிக்கையால் (300) வகுக்கும் போது 1,00,560என வரும். இதை ஆயிரத்தால் பிரிக்கும்போது 100 என்றும் 560மிச்சம்என்றும்வரும்.மிச்சம் 500க்கு அதிகமானதாக இருப்பதால் அந்த மாகாண சட்டசபையில் உள்ள ஒவ்வொரு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரும் ஜனாதிபதித் தேர்தலில் 101 வாக்குகள் வீதம் அளிக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு மாகாணத்திற்கும் கணக்கிடப்படும்.

இவ்வாறு மாகாண கீழ்ச் சட்டசபைகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட மொத்த அங்கத்தவர்கள் அளிக்கக்கூடிய மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை மத்திய (யூனியன்) பாராளுமன்றத்திலுள்ள இரு சபைகளினதும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்து பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஜனாதிபதி தேர்தலில் அளிக்கக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கைகணக்கிடப்படும் இதிலும் பாதிக்கு மேற்பட்ட மிச்சம் ஒன்றென எடுத்துத் கொள்ளப்படும்.

இந்த முறையில் வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுவதால் மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் அளிக்கக்கூடிய வாக்குகளின் மொத்த எண்ணிக்கை மாகாண சட்டசபையிலுள்ள உறுப்பினர்கள் அளிக்கக்கூடிய வாக்குகளின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமானதாக இருக்கும்.

தேர்தலில் வாக்களிக்கும் போது அங்கத்தவர்கள் வாக்குச் சீட்டுகளில் தமது விருப்பங்களின் தரங்களையே அபேட்சகர்களின் பெயர்களுக்கு எதிரே 1, 2, 3...... என்று குறிப்பிடுவர். முதல் விருப்பங்கள் எண்ணப்பட்டதும் குறைந்த ஆதரவைப் பெற்ற அபேட்சகர் நீக்கப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளிலுள்ள இரண்டாம் விபரங்கள் ஏனைய அபேட்சகருக்குச் சேர்க்கப்பட்டு வாக்குகள் மீண்டும் எண்ணப்படும். இவ்வாறு மீண்டும் மீண்டும் எண்ணிக்கொண்டு போகும் போது எந்த அபேட்சகருக்கு அதிகப்படியான வாக்குகள் கிடைக்கின்றனவோ அவரே வெற்றி பெறுவார்.

### பதவிக்காலமும் பதவி நீக்கமும்

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி ஐந்து வருடகாலத்துக்குப்பதவி வகிப்பார். பதவிக்காலம் முடிவடைந்ததும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுண்டு. (ஒரு ஜனாதிபதி இரு பதவிக்காலங்களுக்கு மேல் தொடர்ந்து பதவி வகிக்க முடியாது என்று ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கது.)

பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் ஒரு ஜனாதிபதி இரு வழிகளில் விலகிக்கொள்ளலாம் (1) ராஜினாமா (2) அரசியல் திட்ட விதிகளை மீறிய குற்றத்திற்காக மத்திய பாராளுமன்றம் பதவி நீக்கம் செய்தல். இவ்வாறு வெற்றிடம் ஏற்பட்டால் குறைந்தது ஆறு மாத காலத்திற்குள் புதிய ஜனாதிபதி தெரிவு நடைபெற வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும்ஜனாதிபதியும் ஐந்து வருடங்களுக்குப் பதவி வகிக்கலாம்.

ஜனாதிபதிக்கு ஒரு உத்தியோக வாசஸ்தலமும் மாதச் சம்பளம் ரூ. 10,000 மும் வழங்கப்படவேண்டும் என்று அரசியல் திட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாரளுமன்றம் நிர்ணயம் செய்யும் ஊதியங்கள், படிகள், விசேஷ உரிமைகள் ஆகியவற்றுக்கும் உரியவர் ஆவார்.

### இம்முறைத் தேர்தல் ஒழுங்குகள்

இம் முறை நடைபெறவிருக்கும் ஜனாதிபதி உபஜனாதிபதி தேர்தல்களுக்கு இந்தியதேர்தல் ஆணைக்குழுபின்வரும் திகதிகளை அறிவித்திருக்கிறது:-

ஏப்ரல் 16:- நியமனபபத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்குரிய கடைசி திகதி.

ஏப்ரல் 18 :- நியமனங்களை பரிசீலனை செய்வதற்குரிய கடைசி திகதி.

ஏப்ரல்21:-நியமனங்களைவாபஸ் பெறுவதற்குரிய கடைசி திகதி.

மே 7:- வாக்களிப்புதினம்.

மே 13 :- புதிய ஜனாதிபதியும், உபஜனாதிபதியும், பதவியேற்கும் நாள்.

### உப ஜனாதிபதி

35 வயதுக்கு மேற்பட்ட ஒரு இந்திப் பிரஜை இந்திய மத்திய பாராளுமன்ற மேற்சபையாகிய் ராஜ்ய சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு தகுதியிருக்குமானால் உபஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம். மத்திய பாரளுமன்ற இரு சபைகளின் அங்கத்தவர்கள் ஒரு இணைக் கூட்டத்தில் விகித சமப் பிரதிநிதித்துவ தனிமாற்று வாக்கு முறைப்படி உபஜனாதிபதியைத் தெரிந்தெடுப்பார்கள். உபஜனாதிபதியே மத்தியபாராளுமன்ற மேற்சபை யாகிய ராஜ்ய சபையின் அக்கிராசினராகவும் இருப்பார். உப ஜனாதிபதி பதவி வகிப்பவர் மத்திய பாராளுமன்றத்திலோ அல்லது ஒரு மாகாண சட்ட சபையிலோ அங்கத்துவம் வகிக்க முடியாது.

5-ம் பக்கம் பார்க்க

## ஐயாறன் எழுதுவது

இம்முறை புதுவருட விழாவைப்பற்றிய ஒருகணக்கு இப்போதுவெளியாகியுள்ளது.புதுவருடத்தில் பல குழந்தைகள் பட்டாஸ் காயம் பட்டு ஆஸ்பத்திரிக்கு வருவது வழக்கம். இம்முறை ஒரே ஒரு பெண் குழந்தையேகாயம்பட்டுகொழும்பு குழந்தை ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளதாம்.

இதுதவிர 9 ஆண்களும்ஒரு பெண்ணும் புதுவருட வெடிகளால் காயம்பட்டு கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்களாம் மற்ற இடங்களைப் பற்றிய கணக்குத்தெரியவில்லை.

* * *

வாணவெடிக்குக் காயம் பட்டவர் எண்ணிக்கை குறைந்தாலும், கத்திக் குத்துக்குப் பலியானவர் தொகை முன்னை விட மிக அதிகம்! இம்முறை வெள்ளி, சனி, ஞாயிறு இம் மூன்றுநாளும்புதுவருடப் பெருநாள். வெள்ளியன்று 71பேரும் சனிக்கிழமையன்று 80 பேரும், ஞாயிறன்று 50 பேரும் காயம்பட்டு சிகிச்சைக்காகப் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறார்கள்! முதல் இரண்டுநாளும் கையில் இருந்த காசுக்குக்கள்ளு, சாராயம் வாங்கிக் குடித்துத்தீர்ந்து விட்டதால், மூன்றாம் நாள்மதுபானம் வாங்கக் காசு தீர்ந்துவிட்டதாயும், அதனால் தான் காயம்பட்டவர் எண்ணிக்கையும் குறைந்துவிட்டதாயும்ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார். கையில் காசிருந்தால், அதிகமானவர்கள் கத்திக் குத்துக்குப் பலியாகி இருக்கக் கூடும்! நல்லவேளை.

* * *

சாராய விலையைக் குறைக்க வேண்டுமென்றும்,சொந்தபாவனைக்குத தென்னையில் கள்ளுக்கட்ட லைசன்ஸ் தரவேண்டுமென்றும் பலர் கேட்பதாயும் இக் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்த்தால்,இலங்கை குடிகாரர் முகாமாகி விடுமென்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் காரியதரிசிஒருகூட்டத்தில் கூறியிருக்கின்றார்.

மதுபானம் செய்யக்கூடாதென்றும் அது பஞ்சமாபாதகங்களில் ஒன்றென்றும் புத்தர் பெருமான் உபதேசித்திருக்கிறார். என்றாலும், இலங்கையில் மதுவிலக்கை அரசாங்கம் அமுலுக்குக்கொண்டுவரவேண்டுமென்று கேட்கவும் பௌத்த காங்கிரஸ் காரியதரிசி கூடத் துணியவில்லை. சாராய விலையைக் குறைக்கக் கூடாதென்று மட்டுமே கேட்கின்றார்.

சட்டபூர்வமானசாராய விலை அதிகமிருந்தால்கள்ளச்சாராயகாரர்களுக்கு நன்மையாகிறது. மலிவான தங்கள் சரக்குக்கு அதிக கிராக்கி ஏற்படுகிறது.

கள்ளச்சாராயத்தை பொலிஸுக்குத் தெரிந்தே காய்ச்சுவதாயும், இதில் பல அதிகாரிகளுக்குப் பங்கு உண்டென்றும், சொல்லப்படுகிறது. பிக்குகள் முன்வந்து, மதுவிலக்குப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டால், இந்தத் தீமை வெகுவாகக் குறையக்கூடும். ஆனால் பிக்குகளில் சிலரே......!

* * *

தமிழ்நாட்டிலே சில கிராமங்களைப் பார்த்தேன். கிராம மக்கள் அதிக சுபீட்சமாகக் காணப்பட்டனர். விசாரித்ததில் மதுவிலக்கு அங்கு அமுலிலுள்ளதால், மது அரக்கன் பிடியிலிருந்து பல மக்கள் விடுபட்டுவிட்டதாகத் தெரிவித்தனர்.

மதுவிலக்கு காரணமாக அங்கும் கள்ளச்சாராயம் பல வீடுகளிலும் காய்ச்சப்படுகிறது. இவ்வழக்குகள் அதிகம் நீதிமன்றங்களுக்கு வருகின்

(8-ம் பக்கம் பார்க்க)

# 'யூதர்களைப் பார்த்து தமிழர் முன்னேறவேண்டும்'

## வாலிபர் சங்கவிழாவில் உடுப்பிட்டி எம். பீ. யோசனை

காங்கேசன்துறை, செவ்வாய்
"இந்நாடு இங்கு வாழும் எல்லாமக்களுக்கும் சொந்தமானது என்பது 1956-ம் ஆண்டின் பின் எம்மைப் பொறுத்தவரையில் பொய்யாகிவிட்டது. மொழி, அரசியல், நிர்வாகம் போன்ற எந்தக் கோணத்திலிருந்து நோக்கினும் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டுவிட்டார்கள். நாம் வதியும் நாடு நமக்குச் சொந்தமில்லையென்ற நிலை உருவாகியுள்ளது"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் வர்த்தலை விளான் வாலிபர் சங்க வருடாந்த பரிசளிப்பு விழாவில் 'இலங்கையின் பொருளாதாரம்' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

நமக்குச் சுதந்திரம் கிடைத்த போது தென்கிழக்காசியாவிலே எமது நாடு தான் செல்வத்துடன் கூடிய நாடாக விளங்கியது. தேயிலை, ரப்பர் என்பன உலகின் பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் பெருகியது. இப்பொருள்களினால் கிடைக்கப்பெற்ற பணத்தை பொருளாதார விருத்திக்குச் செலவிடாமல் ஊர் தேசம் சுற்றுவதிலும் கேளிக்கைகளினால் மக்களை மகிழ்விப்பதிலும் செலவு செய்தன அப்போதிருந்த அரசாங்கங்கள். அதன் பலனை இன்று நாம் அனுபவிக்கின்றோம். கடந்த மூன்று மாத காலமாக அரசாங்கம் பண நெருக்கடியினால் தத்தளிக்கின்றது. திறைசேரி பணம் அச்சிட்டால் தான் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியும் என்ற நிலை தோன்றியிருக்கிறது. இது ஓர் சிறந்த கைத்தொழிலாகத் தற்போது விளங்குகிறது. தமிழ் மக்களின் எதிர்காலத்தை எந்த முயற்சியினாலும் இருள் சூழ்ந்ததாக்கி விடமுடியாது. அரசாங்கம் வேண்டாத மருமகளாக தமிழ் மக்களை நடத்தி வருகின்றது.

ஒரு நாடு இன்னொரு நாட்டினை அடிமைகொள்ள வேண்டுமானால் முதலில் அந்த நாட்டின் பொருளாதாரத்தை நசுக்க முயற்சி எடுக்கப்படும்.

1956-ம் ஆண்டுக்குப் பின் தனிச் சிங்களச் சட்டம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமானால் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படித்தேயாகவேண்டும். அரசாங்க தமிழ் ஊழியர் சிங்களம் படிக்க மாட்டோம் என்று கங்கணங் கட்டியுள்ளனர். எனவே அரசாங்கம தமிழ் மக்களின் பொருளாதாரத்தை நசுக்க முயற்சி எடுக்கின்றது.

### சுயமரியாதையுடன் வாழ்வர்

1963-ம் ஆண்டில் சிங்களம் தெரியாத ஊழியர்கள் அரசாங்கப் பதவியை விட்டு விலகினால் அன்றைக்கு இலங்கை பிளவுபடப் போகிறதென்பதனை அரசாங்கம் உணரவேண்டிவரும் என்பதனையும் தமிழ் மக்கள ஒன்றுபட்டு சுயமரியாதையுடன வாழ்வர் என்பதனை வற்புறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். அண்மையில் ரஷ்யா சென்றிருந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அங்கு சிறுபான்மை மக்களுக்கு எந்தவகையான உரிமை வழங்கப்பட்டிருக்கிறதென்பதனை யுணர்ந்திருக்க வேண்டும்.

தேசிய மயம் என்ற அடிப்படையிலே தமிழ் ஊழியர்களின் பதவிகள் பறிபோகின்றன. இதனை அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றது.

### உப்பு உற்பத்தியில் பாரபட்சம்

நாம் எந்தத்துறையில் எந்த வழியில் இதுவரை காலமும் வந்தோமோ அதே பாதை மாற்றியமைக்கப்பட்டால் தான் தமிழ் மக்களின் எதிர்காலம் வளமுடையதாக விருக்கும். ஸ்பெயின் நிபுணர் ஆனையிறவு உப்பளத்தை ஒருகோடி ரூபா செலவழித்து அபிவிருத்தி செய்தால் ஒருவடத்திற்கு இலங்கைக்குத் தேவையான ஒருகோடி டன் உப்பை விளைவிக்கலாம் என்று அரசினருக்கு ஆலோசனை கூறினர். ஆனால் பாரபட்சமான மனப்பான்மையுடன் நடந்துவரும் அரசாங்கம் அம்பலாங்கொடையில் 30 கோடி ரூபா செலவழித்து உப்புவிளைவித்தார்கள். அதன் பலன மாதாமாதம் இலங்கை பிறநாடுகளிலிருந்து பத்தாயிரம் டன் உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது.

### யூதர்களும் தமிழர்களும்

நம்மைச் சூழ்ந்திருக்கிறது கடல். சென்ற வருஷத்தில் மட்டும் 68 கோடி ரூபா பெறுமதியான மீனும், கருவாடும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. நமது கடலில் பல ஆயிரக்கணக்கான மைல் தொலைவிலிருந்து பிறநாட்டார் மீன் பிடித்துச் சென்று நமக்கே பின்னர் அம் மீன் டின்களில் அடைத்து அனுப்பிய பணம் பெறுகின்றனர். நாம் முதல்தர பிரஜைகளாக வேண்டுமானால் நாம் நமது சிறு சிறு எண்ணங்களை முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். அனைவரும் ஒன்றுபடவேண்டும். நம்முடைய சரித்திரத்திற்கும், யூதர்களின் சரித்திரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. யூதர்கள் பல இடங்களுக்குச் சென்று பெருமையுடன் வாழ்ந்தார்கள். தமக்கிடையேயுள்ள பேதத்தைத் துறந்தார். இஸ்ரவேல் நாட்டை வளம்படுத்தினார்கள். செல்வங் கொழிக்கும் நாடு என்று பெருமை பேசும் இலங்கை ஏழை நாடான இஸ்ரவேலிடம் கையேந்திருக்கின்றது. யூதர்களைப் போல நமக்குள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை செல்வங் கொழிக்கும் நாடாக்கினால் நாம் சுயமரியாதையுடன வாழமுடியும். தமிழ் மக்களின் எதிர காலம் இன்றுள்ள இளைஞர்களில் தான் பெரிதும் தாங்கியுள்ளது"

திரு சி. சின்னத்தம்பி வரவேற்புரை நிகழ்த்தினர். மயிலிட்டி கிராமச் சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமை வகித்தார் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசினர். திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் பரிசுகள் வழங்கினர். திரு. செல்வசிவம் நன்றி தெரிவித்தார். வாலிபர் சங்க உறுப்பினர்கள் 'வாழ்க்கைப்புயல என்ற நாடகத்தை நடித்துக் காண்பித்தனர்.

---

## சிரியாவின் புதிய அரசாங்கம்

டமாஸ்கஸ், ஏப். 17
சிரியாவின் புதிய அரசாங்கம் அமகது அடாமஸ் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது.

படைத் தளபதியும் ஒரு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## கி. பாகிஸ்தான் கவர்னர்

### இளைஞர்களுக்கு எச்சரிக்கை

டாக்கா, ஏப். 17
கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஹசிம்கான் இங்கு மதுரசாகட்டிடமொன்றுக்கு அஸ்திவாரக்கல் நாட்டும் வைபவத்தில் பேசுகையில் சமூக விரோத சக்திகளின் கையில் சிக்கிவிடாமல் இளைஞர்கள் விழிப்பாயிருக்க வேண்டுமென்று எச்சரித்தார். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்ய வேண்டுமென்று கவர்னர் கேட்டுக்கொண்டார். நாட்டின் அபிவிருத்திக்கு கிழக்கு பாகிஸ்தானியரும் மேற்கு பாகிஸ்தானியரும் கூட்டாக முயற்சி செய்தாலே நாடு அபிவிருத்தியடைய முடியுமென்றும் அவர் கூறினர்.

---

## பெர்லின் பேச்சுவார்த்தை

### வாஷிங்டனில் ஆரம்பம்

வாஷிங்டன், ஏப். 17
பெர்லின் பிரச்னை சம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்றஸ்க்கும் வாஷிங்டனிலுள்ள சோவியத் ஸ்தானிகரும் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தங்கள் பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருந்தது என்று திரு. டீன்றஸ்க்கும் சோவியத் ஸ்தானிகரும் பின்னர் தெரிவித்தனர்.

மீண்டும் இவர்கள் சந்தித்துப் பேசுவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

மாஸ்கோவிலுள் அமெரிக்கத் தூதர் திரு தொம்ப்ஸன் சோவியத் வெளி விவகார மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக வாஷிங்டனில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

---

## 20,000 போர் வீரர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவர்

வாஷிங்டன், ஏப். 17
பெர்லின் நெருக்கடி காரணமாக அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் உத்தரவின் மீது தீவிர சேவைக்கு அழைக்கப்பட்ட சுமார் 20,000 கடற்படை, விமானப்படை போர் வீரர்கள் மீண்டும் சிவில் வாழ்க்கைக்குச் செல்வதற்கு உத்தரவிடப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

சர்வதேச நிலைமையில் தற்போதைய சூழ்நிலையில் மாறுதல் ஏற்படாமலிருந்தால் இந்தஇருபதினாயிரம் வீரர்களும் படை சேவையிலிருந்து ஜூலை முதல் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படுவர்.

---

# புதுவருடத்துடன் பஸ் சேவைதிறம்படும்

## இ. போ. ச பிரதேச முகாமையாளர்

யாழ்ப்பாணம், புதன்
'புது வருடம் பிறப்பதில் எமக்கு ஏற்படும் புதுமகிழ்வுடன் பெதுமக்களும் ஆனந்தமாக இடையூறு ஏதுமில்லாமல் பஸ்ஸில் பிரயாணம் செய்யக் கூடிய வகையில் நாம பஸ்சேவையை நடத்தலாம்'

இவ்வாறு யாழ்ப்பாணம் இ. போ. ச பிரதேச முகாமை யாழ்ப்பாணப்பகுதி பஸ் ஊழியர்களால் நடத்தப்பட்ட தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டத்தின் போது தெரிவித்தார்.

இக் கொண்டாட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தி உயர், கலை மன்ற மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. தனபாலசிங்கம் அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கியபோது கூறியதாவது:

'முன்னைய சூழ் நிலையையும் பஸ்சேவையையும் விட இப்பொது சூழ்நிலை மாறிவிட்டது பஸ் ஊழியர்களிடையே தற்போது நல்லொழுக்கமும் கடும் உழைப்பும் காணப்படுகிறது.'

இ. போ.ச ஊழியர்களிடையே நடத்தப்பட்ட கைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை டிப்போ வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது.

கயிறிழுத்தல், தேங்காய் உரித்தல் விநோதஉடைப் போட்டி பேன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

தேநீர் விருந்துக்குப்பின் யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவில் கடமையாற்றும் பஸ் கொண்டக்டர் திரு. பாலசிங்கமும் மல்லாகத்தில் கடமையாற்றும் திரு. செல்வராசாவும் இசைவிருந்தளித்தார்கள்.

யாழ்ப்பாணம் மேற்கு டிப்போவினால் "விகடம்" என்னும் நாடகமும் நடாகமும் நடாத்தப்பட்டது.

---

## விழிப்பு !

லலிதாவும் பெண்
சித்ராவும்பெண்.
லலிதாவின் பெண்மை விழித்துக் கொண்டது!
சித்ரா........!
இருவரும் பெண்கள்;
தமிழ்ப் பெண்கள்!
22-4-62 'ஈழநாடு' ஞாயிறு பதிப்பில் வெளியாகும்.
'விழிப்பு' என்ற சிறு கதை விளக்கம் தரும்.

---

## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்
வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட முதல்வழக்கில் முக்கிய சாட்சி கோர்ட்டுக்கு வராதிருந்தமையால் நீதியரசர் விசாரணையை ஒத்திவைத்தார். சின்னப்பொடி தம்பித்துரை என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முக்கிய சாட்சியான பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. குணசேனா வராததாலேயே விசாரணையை நீதியரசர் ஒத்திவைத்தார்.

---

## இந்திய ஜனாதிபதி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜிய சபையின் நிரந்தரத் தலைவர் என்ற காரணத்திற்காக அவருக்கு ஊதியமும் படிகளும் வழங்கப்படுகின்றன. ஜனாதிபதி சுகவீனமடைந்திருக்கும் காலங்களிலும் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் காலங்களிலும் உப ஜனாதிபதி ஜனாதிபதிக்குப் பதிலாகவும் கடமையாற்றுவார். அக்காலங்களில் அவருக்கு ஜனாதிபதிக்குரிய ஊதியமும், படிகளும், விசேட உரிமைகளும் வழங்கப்படும்.

உபஜனாதிபதியும் ஐந்து வருட சாலத்திற்கு பதவி வகிப்பார்.

ஜனாதிபதியின் தேர்தலுக்கு லோக் சபையின் காரியதரிசியும், உபஜனாதிபதியின் தேர்தலுக்கு ராஜியசபையின் காரியதரிசியும் தேர்தல் அதிகாரிகளாக கடமையாற்றுவார்கள்.

---

# கொள்ளைலாபமடிப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை

## லைசன்ஸ் பறிமுதலாக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்
கொள்ளை லாபமடிப்பதாகவும், உணவுப் பொருள்களைப் பதுக்கிவைப்பதாகவும் பொது மக்கள் புகார் கூறும் வர்த்தகர்களிடமிருந்து இதற்கான விளக்கத்தைப் பெறுமாறு அரசாங்க அதிபர்கள் கோரப்பட்டுள்ளார்கள்.

கொள்ளை லாபமடிப்பவர்கள்மீதும் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பவர்கள் மீதும் தீவிர நடவடிக்கை எடுக்கவும் பாவனையாளர்கள் நியாயமான விலைக்கு உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழி செய்யவுமே உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து அமைச்சு இவ்வித நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒழுங்கைமீறி நடக்கும் வர்த்தகர்களின் லைசன்ஸ்களை ரத்துச் செய்யும் அதிகாரத்தையும் அரசாங்க அதிபர்களுக்கு அமைச்சு வழங்கியுள்ளது என வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. கிராமாபிவிருத்திச் சங்கங்கள், மற்றும் சமூகசேவா சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் இத்தகைய வர்த்தகர்களைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. கருவாடு, உப்பு போன்ற உணவுப் பொருள்கள், சில வர்த்தக நிலையங்களில் அதிகமாகப் பதுக்கி வைககப்பட்டிருந்ததை விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிகிறது.

---

## அஸாத் காஷ்மீர் ரேடியோ

### 14-வது ஆண்டுவிழா

கராச்சி, ஏப். 17
பாகிஸ்தான் வசமுள்ள அஸாத் காஷ்மீர் ரேடியோவின் பதினான்காவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தை அஸாத் காஷ்மீர் அதிபர் ஜனப் குர்ஷித் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

ஜனப் குர்ஷித் இவ்விழாவில் பேசுகையில் போர் நிறுத்த எல்லைக்கு அப்பாலுள்ள மக்களை இணைப்பதிலும் காஷ்மீர் விடுதலை இயக்கத்திலும் அஸாத் காஷ்மீர் ரேடியோ பெரும் பங்கு கொண்டிருந்ததென்றும் இனியும் தொடர்ந்து அது சேவை செய்யுமென்றும் நம்புவதாக் கூறினர்.



# மங்கையர் உலகம்

## போதும் என்னும் மனமே பொன்செய்யும்..

—கனகம்—

**வசதியுள்ள பெண்களுக்கு ஏற்பவே பல பத்திரிகைகளில் மாதர் பகுதிகள் நடாத்தப்படுகின்றன. "பாஷன் ஷோக்கள்" பற்றி அவை குறிப்பிடும் அம்சங்களைமட்டும் கவனித்து ஏக்கமுறும் பெண்கள் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆடம்பரத்திலும் வெளிப்பகட்டுகளிலுமன்றிப் பண்பட்ட உள்ளத்திலும் எளிய வாழ்க்கையிலும் தான் வாழ்க்கையின் பூரணத்துவம் தங்கியுள்ளதென இக்கட்டுரையில் "கனகம்" வலியுத்துகிறார். மாதர் பகுதி நடாத்துபவர்களும், இந்த இலட்சியங்களிலேயே தாமது நோட்டத்தைச் செலுத்த வேண்டும்.**

வெறும் சட்டை தைப்பதிலும், சிற்றுண்டி தயாரிப்பதிலும், அழகாக இருப்பது எப்படியென்று தெரிந்து வைப்பதிலும் பெண்களாகிய நாம் அக்கறை செலுத்திவிட்டால் போதாது. வாழக்கை பூரணமாக நாம் இல்லறத்தில் இறங்கும்பொழுது இல்லறப் பொறுப்புணர்ச்சி பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டும். குடும்பத்தை எப்படி நடத்துவது, துன்பம், இன்பம் இவற்றை ஏற்று எவ்விதம் குடும்ப கௌரவத்தைப் பேணிக்காத்து நடத்துவது என்பன பற்றி நாம் அனுபவம் நிறைந்தவர்களிடமிருநதும் வேறுபல வழிகளாலும்தெரிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாக கீழைத் தேசத்தில் வெறும் ஆடம்பரம் நமது இல்லறத்தை நல்லறமாக நடதத உதவி செய்துவிடாது, ஆடம்பரம், ஆடைஅலங்காரம் இவற்றிலேயே நமது மனம் எந்நேரமும் லயித்திருந்தால் பணம் இல்லாதபோது அல்லது குறைந்தபோது வாழ்க்கையிலேயே வெறுப்புத்தான் ஏற்படும். விரக்திதான் உண்டாகும். 'இதுவா இல்லறம்' என்று கசப்பு வளரத்தொடங்கும். வெறும் சட்டையை பாஷனாகத் தைக்கத் தெரிந்து வைத்தால் மட்டும் வாழ்க்கை நடத்திவிடமுடியாது. சிற்றுண்டியோ மாங்காய்ச் சம்பலோ தயாரிக்கமட்டும் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. முகத்தை அழகாக வைத்திருக்க மட்டும் தெரிந்தால் போதாது. பொறுமை, விரிந்த மனப்பான்மை, சாந்தமான குணம், இவற்றைப் பேணிவளர்க்கும் தன்மை, தாய்மைக்குணம் இவை தேவை. வெறும் வெளி அலங்காரம் மட்டும் வாழ்க்கைக்குப்பூரணமாக உதவிவிடாது. வெளிச் சுவருக்கு மட்டும் வர்ணம் பூசி உட்சுரில் அழுக்குப்படவிட்டால்அல்லதுவர்ணம் பூசாதுவிட்டால் எப்படியிருக்குமோ அப்படித்தான வெளியாட்களின்பார்வைகது நாம் அழகாக இருந்துவிட்டால் போதாது. நம உள் அகத்திலும் தூய்மை, அமைதி, ஒழுங்குஇருககவேண்டும். சீரான வாழ்வு முறையை வகுக்கவேண்டும். இல்லறத்தில்இல்லாததையிட்டு ஏங்காதிருப்பதைக்கொண்டு திருப்தி அடைந்துகொள்ள நாம் பழகிக்கொள்ளவேண்டும். வாழ்க்கைகல்லும்முள்ளும்கொண்ட ஒரு பிரயாணம். இந்தப் பிரயாணத்தை நாம் மேற்கொள்ளும்போது நமது இதயத்தில் தாங்கும் தைரியம், ஏற்றுக்கொள்ளும் நெஞ்சுறுதி,கலங்காத திடநெஞ்சம்இவை வேண்டும். இவையில்லாவிட்டால் ஒவ்வொரு சிறுதோல்வியும்பிரயாணத்தைத தடைசெய்யும் பெரிய தடையாக முன்னிற்கும். இவற்றைக் கண்டு பதறுவதை விடுத்து எதிர்ப்பதற்கான துணிவை நாம் மனதில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பெரும்பாலான இளம் பெண்கள் இல்வாழக்கையில் இறங்கும்போது உல்லாசபுரிக்கு செல்வதாகக் கற்பனை செய்துகொண்டு கல்யாணம் செய்கிறார்கள். ஆனால்அவர்கள் சில பொறுப்புள்ள கடமைகளை நிறைவேற்றவேண்டி வந்தவுடன் வெறுப்படைய தொடங்கிவிடுகிறார்கள். சினிமாவில் பார்ப்பது போல் அல்லும் பகலும் காதல் கீதங்கள் பாடிக்கொண்டு ஆடி ஓடிவரலாமென கற்பனை பண்ணுகிறார்கள். சினிமா வேறு; வாழ்கக்கை வேறு. அது நடிப்பு. இது அப்படியல்ல. அங்கே இன்னொருவர் சொல்வதை செய்துவிடுகிறார்கள். இங்கு நாமேஉணர்ந்து பொறுப்பு வாய்ந்த சில கடமைகளை நிறைவேற்றவேண்டி உள்ளது. சினிமா மூன்று மணித்தியாலங்களில் பார்த்து ஒழிந்துவிடுகிறது. வாழ்க்கைஅப்படியல்ல, துன்பம், பாசம், ஏமாற்றம், தோல்வி, துயரம் இத்தனைக்குமிடையில் மனம் தளராமல் சகித்து கௌரவத்துடன் நிறைவேற்றவேண்டிய ஒரு பொறுப்பு. இதைப் பல இளம்பெண்கள் உணர்வதில்லை. சீதனம் கொடுக்க முடியாது என்று கங்கணம் கட்டும் பெண்கள் தமக்குள் சிக்கனத்தைப்பேணுவதில்லை. விவசாயியை விவாகஞ் செய்துகொள்ள விரும்புகிறார்களா? சிறு ஊதியம் பெறும் ஒருவனை மணம்செய்ய சம்மதிக்கிறார்களா? தாம் ஒரு டாக்டரையோ என்ஜினியரையோ மணந்து காரில பவனிவரவேண்டுமென கற்பனை பண்ணுகிறார்கள். ஆண்கள் மட்டும் பண வெறியர்களல்ல! பெண்களும் இப்படித்தான் என்றுசொல்லுமளவுக்குபெண்களிற பலர் வாழ்கிறார்கள்என்பதை மறுக்கமுடியாது. தமது உல்லாச நினைவுகள் ஈடேறுது போகக் கூடியநிலை வந்துவிடுமோவெனப் பயந்து இளப பெண்களிற் பலர்எனக்குக் கல்யாணமே வேண்டாமெனப் பிடிவாதமாகக் கூறிவிடுகிறார்கள். பிறரை நாம் திட்டுமுன்னரே நம்மைத் திருத்த முடிகிறதா என்பதை சற்று எண்ணவேண்டும். நாகரிகத்தில் அதாவது ஆடை அணி லன்பூணும் நாகரிகத்தில் வளர்ந்துவிட்ட பெண் தனககு ஈடாக நாகரிக முதிர்ச்சியடைந்த ஆணையே மணக்க விரும்புகிறாள், ஆனால் ஆண் இந்தரீதியில் விரும்பினால் ஆண்வர்க்கத்தின்மீதே வசைபாடஆரம்பிக்கிறார்கள். சமுதாயத்தை மாற்ற ஒருசாரார் மட்டும் தியாகம் செய்துவிட்டால் போதாது. நாம் தியாகம் செய்ய விரும்பாதுபோனால் நடப்பதைப் பார்த்துக்கொண்டு பேசாது இருப்பதும் தான் முறை. நாம் சொகுசாக வாழவேண்டும். அலங்காரமாக, ஆடம்பரமாகச் சருமம் சருங்காது வாழவேண்டுமென்று எண்ணிக்கொண்டு மற்றவர்களுக்குப் போதிப்பதில் அர்த்தமில்லை.

நாம் அணுகவேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை அணுகுவது எப்படி, அவற்றைத் தீர்ப்பது எப்படி, நாளாந்தம் ஏற்படும் பிரச்சினைகளில் முக்கியமானவை எவை என்றெல்லாம் ஆராய்ந்து அவற்றுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும்.

காரிலும் கடற்கரையிலும் நமது வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்துவிட முடியாது அதேபோல் கண்ணாடி முன்னிலையில் வாழ்நாள் பூராவும் நின்றுவிட முடியாது. வசதியுள்ள பெண்களுக்குமட்டுமே மாதர் பகுதி நடத்தப்பட்டுவருகின்றன பல பத்திரிகைகளில் வசதியற்ற பலர் இவ்விதம் ஆடம்பர ரீதியில் வாழமுடியாதிருக்கிறதே என ஏங்கவேண்டிய நிலையில் மாதர் பகுதிகள் இருக்கின்றன. 'பாஷன்ஷோ'க்கள் நிறைந்ததாகவே இருக்கிறது. இவை சாதாரண வருவாய் உள்ள நடுத்தர குடும்பப் பெண்களுக்கு உதவுமா என்பதுபற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். நடுத்தர வகுப்பிலுள்ள பெண்களே நம் நாட்டில் அதிகம். ஓரிரு முக்கிய நகரங்களில் மட்டும் சில பெண்கள் நம் நாட்டில் இப்படி வாழ்ந்து விடலாம். இதைப் பார்த்துவிட்டு அவர்களது வாழ்க்கை நமக்குக் கிட்டவில்லையே என ஏங்குபவர்கள் பலர். தேவை எது, தேவையற்றது எது; வேண்டியதுஎதுவேண்டாததுஎது,ஏற்றதுஎது ஏற்காததுஎது இவற்றைஆராய்ந்து நம் நிலைமையறிந்துஉறுதியான முடிவுக்கு வர நாம் தெரிந்துகொள்ள வேண்டும். வாழ்வில் குழப்பமில்லாமல் நிம்மதி நிலவ சபலமில்லாது சாந்தி நிலவ அதிருப்தி அடையாது திருப்தியாக வாழ்வதெப்படி என்பதுபற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும்; அனுபவ அறிவு பெறவேண்டும். உள்ளதைக் கொண்டு உயர்வான வாழ்வு வாழ நாம் ஊக்கம் கொள்ள வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## புகைப்பிடிக்கும் பெண்களுக்கு கர்ப்பத்தில் ஆபத்து!

பெண்களிடையே புகைப்பிடிக்கும் பழக்கம் பரவி வருவதாகத் தெரிகிறது. அன்புள்ள மாலதிக்கு... என்னும் கடிதத்தொடரில் கிருஷ்ணவேணி ஒரு தடவை இது பற்றிக் குறிப்பிட்டது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம். தமிழ்ப் பெண்கள் சிலரிடையேயும் இந்தப் பழக்கம் இருந்து வருவதாகக் கிருஷ்ணவேணி குறிப்பிட்டிருந்தார்.

வாஷிங்டனில் நடைபெற்ற விஞ்ஞானப் பரிசோதனையொன்றினால் புகை பிடிக்கும் பெண்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்து பற்றித் தெரியவந்துள்ளதாம்.

கர்ப்பிணிப் பெண்கள் புகைப்பிடிப்பதால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அளவில் மிகச் சிறிய உருவம் பெற்றிருப்பதாக விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

புகைப்பிடிக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சாதாரண அளவைவிட மிகச் சிறிய குழந்தைகள் பிறக்கின்றன இதனால் குறைப்பிரசவம் ஏற்படும் ஆபத்து சில வேளைகளில் உண்டாகிறதாம்.

நரம்பு வியாதிகள் - குருடு சம்பந்தப்பட்டதேசியஆராய்ச்சி ஸ்தாபனம் நடத்திய பரிசோதனையின் மூலம் இது தெரிய வந்துள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 50, 000 கர்ப்பிணிப் பெணகளையும் அவர்களது குழந்தைகளையும் அவர்களின் உடற்கூறு குறித்து நீண்ட காலத்துக்குத் தொடர் பரிசீலனை நடாத்தப்பட்டது. இவர்களில் 7500 கர்ப்பிணிகளுக்குபுகைப்பிடித்த காரணத்தால் குறைப் பிரசவம் ஏற்பட்டதாம்.

வாஷிங்டனிலுள்ள இந்த ஆராய்ச்சி நிலையத்தின் பிரதம டாக்டர் ரிச்சார்ட் மசாலாந்து ஆவர்.

## நவலப்பிட்டியாவில் வாதநோய்

நவலப்பிட்டி,. திங்கள்

இருகுழந்தைகளுக்கு வாத நோய் கண்டு நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

**பண்டாரவளை**

தியத்தலாவைப் டெவிசைச் சேர்ந்த ஒருவரின் குழந்தையொன்று மரணமானதன் பேரில் பண்டாரவளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சண்முகநாதன், ரஷ்ய நோய்தடுப்பு வில்லைகள் 000த்தை பண்டாரவளை, அப்புத்தளை, தியத்தலாவைப் பகுதிகளிலுள்ள பிள்ளைகளுக்கு வழங்கியுள்ளார்.

## அப்பள வகைகளும் அவற்றை தயாரிக்கும் முறைகளும்

எமக்குத் தேவையான அப்பள வகைகளை நாமே தயாரித்துக்கொள்ளலாம். வேண்டுமானால், அப்பளம் தயாரிப்பதை ஒருகுடிசைக்கைத்தொழிலாகக் கொண்டு பணம் சம்பாதிக்கவும் முடியும். இதுசுலபமான வேலையும் அமைதியான பொழுது போக்குங்கூட.

**சரோஜினி சங்கர்** தந்துள்ள மூன்று வகையான அப்பளங்களைத் தயாரிக்கும் முறைகளை இங்கு தருகிறோம். படித்தால் மட்டும் போதாது. அவற்றைச் செய்தும் பாருங்களேன்.

### 1. உளுந்து அப்பளம்

**தேவையான பொருள்கள்:-**

உளுத்தம் பருப்பு $\frac{1}{4}$ படி
பிரண்டைக்கொடி சுமார் 9" நீளம்
உப்பு ... $\frac{1}{4}$ ஆழாக்கு
பெருங்காயம் சிறிதளவு

**செய்முறை:** உளுத்தம் பருப்பை நீர்விட்டு சிறிதுநேரம் ஊறவைத்துப் பின் தோல் போக சுத்தமாகக் கழுவி எடுத்துக்கொள்ளவும். இது முழுவதும் வெள்ளைப் பருப்பாக இருக்கவேண்டும். வெயிலில் நன்றாகக் காயும்வரை உலர்த்தி எடுத்துக்கொண்டு கல்யந்திரத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு நைஸான மாவாக அரைத்து சலித்து எடுத்துக்கொள்ளவும். இந்த மாவை மெஷினில் அரைக்கக் கூடாது.

பிரண்டைக்கொடியை சுத்தமாகக் கழுவி, இலை, காம்புகளை ஆய்ந்தெறிந்துவிட்டு,தண்டை மட்டும் சிறு துண்டுகளாக நறுக்கி அம்மியில் நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு இந்த விழுதையும் அதில் போட்டு கொதி வரும் வரை அடுப்பில் வைத்திருக்கவும். பிறகு இறக்கி உப்பு, பெருங்காயம் ஆகிய இரண்டையும் இச்சாற்றில் கரைத்துக்கொண்டு வடிகட்டித் தெளிவை எடுத்துக்கொள்ளவும்.

இந்தக் கரைசலை விட்டு உழுத்தம் மாவைக் கெட்டியாகப் பிசைந்துகொள்ளவும். இப்படிப் பிசைந்த மாவை அம்மியில் விளக்கெண்ணெய் தடவி உலக்கையைக்கொண்டு நன்ருக இடிக்கவும்.

நன்ருக இடித்ததும் இந்த மாவை சிறு உருண்டைகளாக உருட்டிக்கொண்டு குழவியினல் அப்பளமாகஇடவும். அப்பளம் ஒரே சீராகவும் ஒத்த அளவுள்ளதாகவும் இருக்க வேண்டும். நன்ருகப் பொரிவதற்காக சிறிதளவு சோடா உப்பு சேர்ப்பதும் உண்டு. இட்ட அப்பளத்தை வெயிலில் உலர்த்தி எடுத்துவைக்கவும்.

### 2. அரிசி அப்பளம்

**தேவையான பொருள்கள்:**

பச்சரிசி $\frac{1}{4}$ படி
எலுமிச்சம்பழம் 2
உப்பு 6 கரண்டி
பெருங்காயம்
தேங்காயெண்ணெய்

**செய்முறை:-** பச்சரிசியைக் கழுவிக் களைந்து ஜலத்தை இறுத்து அரிசியை மட்டும் எடுத்துக்கொள்ளவும். வாணலியில் அரிசியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு இளஞ் சிவப்பாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். இதைக் கல்யந்திரத்தில் நைஸானமாவாகஅரைத்து சலித்துக்கொள்ளவும்.

எலிமிச்சம் பழங்களைச் சாறு பிழிந்து கொட்டைகளை நீக்கிவிட்டு அதில் உப்பையும் சிறிதளவு பெருங்காயத்தையும் கரைத்து வடிகட்டிக்கொள்ளவும்.

இந்தக் கரைசலைவிட்டு மாவைக் கெட்டியாகப் பிசைந்து பின்பு அம்மியில் தேங்காயெண்ணெயைத் தடவிக்கொண்டு மாவை உலக்கையினல் நன்ருக இடித்து எடுத்துக் கொள்ளவும்.

இந்த மாவை சிறு உருண்டைகளாக உருட்டி அப்பளமாக இட்டு வெயிலில் காயப் போட்டு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

### 3 கோதுமை அப்பளம்

**தேவையான பொருள்கள்:**

கோதுமை 4|1 படி
பச்சை மிளகாய் 6
உப்பு 4 கரண்டி
வெங்காயம் சிறிதளவு.

**செய்முறை:** கோதுமையை 12 மணி நேரம் நீரில் ஊறப்போட்டு பின்பு நன்ருகக் கழுவிக் களைந்து எடுத்துக் கலலுரலில் இட்டு மசிய அரைத்து சக்கையைப் பிழிந்து எறிந்துவிட்டு சாற்றை எடுத்துக்கொள்ளவும். இது கட்டியான பால்போல இருக்கும். இதை ஒரு பாத்திரத்தில் இரண்டு மணி நேரம் வைத்திருந்தால் தண்ணீர் மேல் மட்டத்தில் தெளிவாகத் தங்கும். அதை இறத்து எடுத்துவிட்டு கூழ்போல் உள்ள மாவுக்கரைசலை மட்டும் எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அடுப்பின் மேல் வைத்துக் கோதுமைக் கூழ் உள்ள பாத்திரததை வைக்கவும். கூழ் உள்ள பாத்திரத்தைச் சுற்றிலும் தண்ணீர் இருக்க வேண்டும். நீர் கொதிக்கும் போது கூழ் வெந்து இறுகிப் பதமாகி விடும்

பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் ஆகியவற்றை நன்ருக அரைத்து இந்த மாவுடன் கலந்து அம்மியில் தேங்காயெண்ணெய் தடவி இடித்து எடுத்துக்கொள்ளவும். சிறு உருண்டைகளாக உருட்டி அப்பளம் இட்டு வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

## போதும் என்னும்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மனச் சோர்வு இன்றி சுறுசுறுப்புடன் வேலைகளைப் புன்சிரிப்புடன் செய்து முடிக்க நாம் தைரியத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவர்களுடன் ஒப்பிட்டு நாம் வாழ முடியாது. இப்படி ஒப்பிடுவதால் நமக்கிருக்கும் குறை நமக்கு பெரிதாகத் தெரிகிறது. நமக்கிருக்கும் வசதிகளுடன் நாம் வாழ்வில் திருப்தி காண முற்பட வேண்டும். இல்லாவிட்டால் நிம்மதியற்ற வீண் அலைச்சல் தான்

வாழ்க்கை ஒரு உல்லாசப் பிரயாணம் போன்றதல்ல. அது ஒருயாத்திரை அதில்எதிர்பார்த்ததும்வரும் எதிர்பாராததும் வரும். யாத்திரை செய்யும் போது நாம் விரும்பிய இடத்தையடைய வேண்டுமென விரும்பி கஷ்டங்களைக் கடந்து செல்ல நாம் தயாராக இருக்க வேண்டும். இடுக்கண் வரும் போது சிரிக்கப்பழகவேண்டும். வெறும் வெளி அலங்காரம் வாழ்வை அலங்காரப்படுத்தி விடாது. உள்ளமைப்பு சரியாக இல்லாதபோது வெளியமைப்பு சீராக இருக்காது.

சிரித்த முகத்தோடு பிறரை உபசரிக்க நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சமுதாயத்தில்பெண்கள் நல்லபெயர்எடுப்பது நடந்துகொள்ளும் விதத்தாலே தவிர உடுத்திக்கொள்ளும் உடையாலல்ல. கடைக்காரர் கடன் தருபவராக இருந்தால் நாம் கடையிலுள்ள அரைவாசியை வீட்டிலே வாங்கி வைத்துவிட்டு பின்னர் கடன் கொடுக்க முடியாது திண்டாடுகிறோம்..கடன் கொடுக்க முடியாதிருக்கிறது. என்ன வாழ்க்கை இது - இப்படிச் சலித்துக்கொள்கிறோம்; கசந்து கொள்கிறோம். கடன் வாங்கு முன் இவற்றை வாங்கினால் பணம் கொடுக்க வேண்டுமே என்ற முன்யோசனை இருந்தால் நாம் வீணைக் கடன்காரர்களாக கடன் அவஸ்தையில் கிக்கமாட்டோம். இருப்பை அறிந்து செலவிடவேண்டும். நல்லவை நாலு இருந்தால் போதும். நாம் தான் தேவையை உண்டாக்குகின்றோம். ஒரு பொருள் அத்தியாவசிய தேவையா தேவையில்லையா என்பது பற்றி நாம் திட்டமாகக் கணித்துக்கொள்ளாவிட்டால் பின் நாம் தடுமாற்றத்தினல் திண்டாட வேண்டியது தான்.

வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்புக்கு நாம் முன்யோசனையின்றி நடந்து கொள்வதும் ஒகரு காரணம். வருமானத்துக்கு மிஞ்சிய வாழ்வு நம் மானத்தை வாங்கி விடும்.

அன்றுடம் வாழ்க்கைக்கே அவதிப்படும் கூட்டம் இன்று அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் நாம் சொகுசாக வாழ நினைப்பது பெரிய தவறு. எதிர்கால வாழ்வில் அக்கறையற்றவர்களாகவே நாம் கணிக்கப்பட வேண்டும். வீண் ஆடம்பரங்களில் பிறருடன் போட்டியிடுதல் நம்மை இழிநிலைக்கே கொண்டு சென்று விடுகிறது. 'அவர்கள் அப்படியிருக்கிறார்களே,- இப்படிப் பல பெண்கள் இன்று ஏக்கம் கொள்கிறார்கள். பிறர் ஒரு நல்ல சேலை கட்டி வந்தால் அதைப்பறி வர்ணிப்பதில் அரைவசி நாள் ஓடி விடுகிறது. காரணம் உள்ளத்தில் எழும் ஒருவித ஏக்கம். இந்த ஏக்கம்- நமக்கு அப்படி உடுக்க முடியவில்லையே என்ற ஏக்கம்- நமக்கு நன்மை செய்வதை விட தீமையே அதிகம் செய்கிறது. வாழ்வில் வெறுப்பு, விரக்தி இதெல்லாம் ஏற்படுவதற்குக்காரணம் இந்த சிறுகாரியங்களுக்காகவும் நாம் ஏங்குவதே. நம்மிடம் இருப்பதுடன் திருப்தியாக வாழ நாம் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். நம்மை விடக் குறைந்தவர்கள் வாழ்கிறார்கள் என்ற நினைவை நாம் வரவழைத்து வாழ்வில் நிம்மதியை ஏற்படுத்தவேண்டும். இன் முகம் காட்ட, இனிதாக உபசரிக்கநாம் பயின்று கொள்ளவேண்டும். உறுதியான, ஸ்திரமான அடிப்படையில் நமது வாழ்க்கையை அமைக்க வேண்டும். உறுதியான அடிப்படையில் அமையும் வாழ்க்கை தான் உயர்ந்து வளர முடியும். இல்லாவிடில் சரிந்து சாய்ந்து விடுகிறது. நகையும் உடையும் மட்டும் நமக்கு நல்லவகையான வாழ்க்கையைத் தந்து விடாது. நம்மைக்காத்துக் கொள்ள, நமது வாழ்க்கையைப் பாதுகாத்து வளர்க்க நாம் பயிற்சி பெற வேண்டும்; பழக வேண்டும்.

எவ்வளவோ விருப்புவெறுப்புகளுக்கிடையில்,கசப்பு இனிப்புக்களுக்கிடையில்பொறுப்பு மிகக கடமை ஒன்றை நிறைவேற்றவேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டியவர்கள் பெண்கள்.

## கிளிநொச்சியில் புதுவருட விளையாட்டு போட்டிகள்

### பரிசுபெற்றோர் விபரம்

கிளிநொச்சி, செவ்வாய் புத்தாண்டையொட்டி புதுவருடதினத்தன்று கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியினல் விளையாட்டுப் போட்டிகள், நடனப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இவைகளில் பங்குபற்றிய பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

**கைப்பந்தாட்டப்போட்டி விபரம்**

1. உருத்திரபுரம் கோஷ்டி
2. கனகபுரம் கோஷ்டி

**100 யார் ஓட்டம் பாடசாலை மாணவர்கள்.**

1. எம். அற்புதசேகரம், மா. வித்தியாலயம், உருத்திரபுரம், 2. ப. நடராசா மா வித்தியாலயம், உருத்திரபுரம், 3 ஐ. பாக்கியசோதி, வட்டக்கிச்சி கிழக்கு அரசினர் பாடசாலை.

**100 யார் ஓட்டம் (16 வயதுக் குட்பட்ட மாணவிகள்)**

1. பி. செல்வராணி, கிளிநொச்சி சைவவித்தியாசாலை, 2. எஸ். சர்வேஸ்வரி கிளிநொச்சி சைவவித்தியாசாலை. 3. கா.தவமணி பரந்தன் சைவ வித்தியாசாலை

**100 யார் படியாத 16 வயதுக் குட்பட்ட பிள்ளைகட்கு**

1. கே. செல்வரத்தினம். உருத்திரபுரம், 2. எஸ். இரவிச்சந்திரன் பரவிப்பாஞ்சான், 3. கே. தங்கராசா உருத்திரபுரம்.

**10 மைல் சைக்கிள் ஓட்டம்**

1. ஆர். இராசேந்திரம், 2. எஸ். கறுப்பையா, 3. டி. சின்னமணி.

**தேங்காய் துருவல் போட்டி**

1. திருமதி கெலன் பிரான்சிஸ், ஜயந்தி நகர், 2. செல்வி எஸ். சந்திவதி, கருணைநிலையம், 3. சி. மங்கயர்க்கரசி, ஏ. இரத்தினசோதி.

**சாக்கோட்டம்**

1. எம. ஜேக்கப் ஜயந்தி நகர், 2. எம். மகாதேவன் ஜயந்திநகர், 3. ஜி. இமானுவல் கனகபுரம்.

**தடை ஓட்டம்**

1. பி. குலசிங்கம் கனகபுரம், 2. எம். ஜேக்கப் ஜயந்தி நகர், 3. எம். ஏ. வால்டர் கனகபுரம்.

**100 யார் (35-50 வயதுக்குட்பட்டோர்)**

1. வி. சுப்பிரமணியம் குமரபுரம் வி. சி. 2. எஸ். கோபால் கிளிநொச்சி, 3. கே. பெருமாள் கிளிநொச்சி.

**100 யார் (16-35 வயதுக்குட்பட்டோர்)**

1. எ. ஆர். சுசானந்தர் கனகபுரம், 2 ஏ. எம். வால்டர் கனகபுரம், பி. குசிலங்கம்.

**1 மைல் ஓட்டம்**

1. கே. வேலுப்பிள்ளை இராமநாதபுரம், 2. ஆர். இராசேந்திரன் கனகபுரம், 3. கே. அப்புத்துரை வட்டக்கச்சி.

**16 வயது சமநிலை ஓட்டம் (பெண்கள்)**

1. வி. செல்லம்மா, 2. வி. சரஸ்வதி, 3. வி. செல்வநாயகி

**சமநிலை ஓட்டம் (ஆண்கள்)**

1. எஸ். பரமசாமி இராமநாதபுரம். 2. ஏ. கணபதிப்பிள்ளை? உருத்திரபுரம், 3. கே. பாலசுப்பிரமணியம் 8-ம் துண்டு.

**விநோத உடை**

1. ஆர்.சத்தியமூர்த்தி கனகபுரம், 2. சரஸ்வதி, செல்வராணி, சைவவித்தி, 3. எஸ். கதிரேசுத்தம்பி கனகபுரம்.

**சைக்கிள் ஓடடம்**

1. எம். சுந்தரமூர்த்தி பரந்

(8ம் பக்கம் பார்க்க)

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

புதன் 18-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நிகழ்ச்சி, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 ஈஸ்டர் விசேஷ நிகழ்ச்சி, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஜலதரங்கம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 வி. கே. குமாரசாமி - வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 எஸ். வன்னியசிங்கம் – பேச்சு, 9-30 பாட்டு

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 காரைக்குடி கமலா - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 2-10 டி. நரஸிம்மாச்சாரி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கேள்விஅரங்கம் (சென்னைஅஞ்சல்), 7-45 'ராகுகாலம்' - நாடகம், 8-00 காரைக்குடி கமலா – வீணை, 8-30 திரைப்படஇசை, 9-15 கல்லுரை, 9-20 லயவின்யாசம், 9-30 சேதுபந்தனம் ஹரிகதா காலட்சேபம்.




## ஐயாறங்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றன. என்றாலும் பொதுவாக குடிப்பழக்கம் அங்கு வெகுவாகக் குறையவும் மக்கள் அதிக சுபீட்சமாக வாழவும் மதுவிலக்கால் முடிகிறதென்று அறிந்தேன். அந்த நிலை இங்கும் ஏற்படும் நாள் என்னாளோ!

* * *

'எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவு நின், தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!'

— தாயுமானவர்

## புத்தாண்டு விழாக்கள்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில்பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து பரிசில்களை வழங்கினர்.

நவிண்டில் நாவலர் சனசமூக விளையாட்டுப் போட்டியில் திரு. ஈ. எம். வி. நாகநாதன் எம். பி. திரு. சிவசிதம்பரம் எம். பி. திரு. ஜெயக்கெகடி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

நெல்லியடி முருகமூர்த்தி ஆகிய வீதியில் "கண் திறந்தது" என்ற சமூகக்கிண்டல் நாடகம் நடந்தேறியது.

# மொழி உரிமை பெறும்.....

(1-ம் பக்கத் தொடரச்சி)

பாவித்து தன் துருப்புக்களை தமிழ்பேசும் மக்கள்மேல் அட்டூழியஞ்செய்யும்படி கட்டவிழ்த்துவிட்டது. இதை உற்றுப் பார்க்கும்போது அரசாங்கம் செய்தவை துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் இடமானவை. தனது இராணுவத் துருப்புக்களை ஒரு சிறுபான்மையோருடைய இலட்சியத்தை அடக்க விடுவது ஒரு கெட்டித்தனமானகாரியமல்ல. வாள் எடுப்பவன் வாளாலேயே மடிவான்.

ஒரு சிறுபான்மை இனம் தமதுமொழியுரிமையை ஏகோபித்து, தொடர்ந்து உணர்ச்சியுடன் கோரிநின்ற இடத்தில் இந்த அரசாங்கம் நடந்துகொண்ட விதம் மிகவும் மிலேச்சத்தனமானதேயன்றி சீர்திருந்திய மக்கள் நடந்துகொள்ளுɱ் வழியல்ல.

இப்படியிருக்கும்போது நாம் நடந்து கொள்ளவேண்டியது எப்படி? எமது கோரிக்கையைக் கைவிடாது தொடர்ந்து போராட்டத்தை நடத்தவேண்டியதுதான். எங்கள் பிரதேசத்தில் எங்கள் மொழி அரசமொழியாகவேண்டும். நாம் பொறுத்திருக்கமுடியாது.

சிலர் எண்ணியிருக்கலாம் எங்களிடம் ஒன்றும் செய்வதற்குச் சக்தியில்லையென்று. அது முழுப்பிழை. இந்த அரசாங்கம் ஆதிக்கத்துக்கு வந்ததும் எங்கள் சக்தியால்தான். அது எங்களை ஏமாற்றித்தான் அப்படி வந்தது. ஒரு தேசத்தின் சரித்திரத்தில் ஓராண்டு ஒரு விநாடியைப்போன்றது. நாம் ஒருமித்துப் பலமாக நிற்போமானல் வெற்றி எமதே. தமிழ் பேசும் மக்கள் அடங்கியொடுங்கிக்கிடக்கவில்லை. உயிரோடும். உணர்ச்சியோடும் அஹிம்சாமுறையில் தொடர்ந்தும் எதிர்க்கிறோர்களென்பதற்குத் தான் இந்தக்கூட்டம்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசியதாவது:-

"மக்கள் ஆதரவு இல்லாமல் இராணுவ ஆட்சிமூலம் தமிழ் மக்கள்மீது ஆட்சிசெலுத்த அரசாங்கம் எண்ணுகிறது. எந்த ரூபத்தில் ஆட்சிமுறையைக் கையாண்டாலும்சரி தமிழ்மக்கள் தமது உரிமைக்காகத் தொடர்ந்து போராடுவார்கள் என்பது உறுதி.

அரசாங்க சேவையிலிருப்பவர்கள் 1963-ம் வருடத்துக்குள் சிங்களம் படியாவிடில் அரசாங்க சேவையிலிருந்து விலகவேண்டுமென அரசாங்கம்சட்டமியற்றியுள்ளது. இந்த நேரத்தில்தான் தமிழர்கள் ஒற்றுமையையும், சுயஉணர்வையும், வீரத்தையும் காட்டத் தயாராகவேண்டும்."

கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசியதாவது:-

'அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் சமயத்தில் இடைத்தேர்தல் நடத்தமுடியாது என்பதை நான் சபாநாயகரிடம் தெரிவித்தேன். ஜனநாயகநாட்டில் ஜனநாயகரீதியிலேயே தேர்தல்களை நடத்துமாறும் அவரைக் கேட்டிருந்தேன்.

அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களுக்கெதிராக அமுலாக்கப்பட்டு தற்பொழுது சகல இலங்கைவாழ் மக்களுக்கு எதிராகிவிட்டது.'

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசியதாவது:-

எங்கள் பாதைகள் மாறினலும் அடையும் இடத்தை நாம் மாற்றிக்கொள்ள மாட்டோம். தமிழர்களின் சத்தியாக்கிரகம் உண்மையில் நல்ல பயன்களைச் செய்திருக்கிறது. இந்த சத்தியாக்கிரகத்தை இனி எப்படி நடத்துவது என்பது பற்றிநாம் ஆராய்ந்து வருகிறோம்.

திருக்கோணமலையில் வரும் 28, 29-ம் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயல் கமிட்டிகூடும் போது தமிழர்கள் தமது உரிமைகளை எவ்விதம் பெறுவது என்பது பற்றி ஆராயும். இதன் விபரம் பின்னர் தெரிவிப்போம்."

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசியதாவது:-

"எம்மிடம் எமக்கு நம்பிக்கை வளர்ந்தால்தான் நாம் சுதந்திரம் பெறமுடியும். நாம் பிறர் தயவின்றி வாழமுடியாது என்று அவர்களின் உதவிக்காக நமது உரிமைகளை விட்டுக்கொடுத்து வாழத் தொடங்கிவிட்டால் பின்னர் சுதந்திரம் நமக்கு எட்டாத ஒரு பொருளாக மாறிவிடும்.

1963-ம் வருடம் அரசாங்க ஊழியரிற் பலர் வேலையிலிருந்து விலகி வந்துவிட்டால் என்ன செய்வது என்ற கேள்வி எழுந்துள்ளது. இதனல் நாம் கஷ்டமடைந்தாலும், நமது மொழியை இனத்தை நாட்டை பாதுகாப்பதில் நாம் ஓய்ந்துவிடக்கூடாது."

தீவுப்பகுதி எம். பி. திரு. வி.ஏ. கந்தையாபேசியதாவது:

"நமது உரிமையைப்பெற வேண்டில் சில கட்டுப்பாடுகளுடன் ஆலோசனையுடன் நடந்துகொள்ள வேண்டும். பலாத்காரத்தை நாம் உபயோகிக்கக்கூடாது."

திரு. புதுமைலோலன், திரு. எஸ். நடராஜா, திரு. எஸ். கனகசுந்தரம் ஆகியோரும் பேசினர். கூட்டத்தின் இறுதியில் திருமதி அமிர்தலிங்கம் தேசியகீதம் பாடினர்.

## மாநகரசபைக்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

வித்ததைத் தொடர்ந்து மேயர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. இராஜசூரியர் சில சட்டப் பிரச்சினைகளைக் கிளப்பினர். 1956-ம் ஆண்டின் திருத்தப்பட்ட இலங்கைச் சட்ட ஆக்கங்களின் தலைப்பு 252-ன் கீழுள்ள மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 18 (2) (ஏ) பிரிவின்படி ஆணையாளருக்கு விசேஷ கூட்டத்தைக் கூட்ட அதிகாரமிருக்கிறதே தவிர ஒத்திவைக்க அதிகாரமில்லையெனவும் அதனல் இக் கூட்டம் சட்டரீதியானதில்லையெனவும் தெரிவித்தார்.

திரு. எஸ். இராசரத்தினம் பேசுகையில் பிரேரணையின் நோக்கத்தை சரியோ பிழையோ என்று கவனித்து தீர்மானம் செய்ய வேண்டுமென்றும் வீணே சட்டப்பிரச்சினையைக் கிளப்பி காலத்தை விரயமாக்க வேண்டாமெனவும் சொன்னர்

திருவாளர்கள் தேவபாலசுந்தரம், பி. எம். ஜோன், டி. எஸ். துரைராசா, டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் ஆகியோர் கூட்டத்தை ஒத்திவைத்துத் தொடர்ந்து நடத்துவதற்குச் சட்டம் இடங்கொடுப்பதாகவும் கூட்டம் சட்டப்படி கூட்டப்பட்டதெனவும் தெரிவித்தனர்.

இச்சபையின் ஒரேயொரு வழக்கறிஞரான காதி எம். எம். சுல்தான் இதுசம்பந்தமாக தமது அபிப்பிராயத்தை தெரிவிக்க மறுத்துவிட்டார்.

மேயர் திரு. ஜேக்கப், திரு. இராஜசூரியரின் சட்டப்பிரச்சினையை ஆதரித்துப் பேசுகையில் ஆணையாளருக்கு கூட்டத்தை ஒத்தி வைத்துக்கூட்ட அதிகாரமில்லையென்பது கொழும்பிலுள்ள பிரபல சட்ட நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டதெனச் சொன்னர்.

இங்கிலையில் சில அங்கத்தவர்களின் வேண்டுகோளின்படி கொழும்பு பிரபல வழக்கறிஞரான செனட்டர் எஸ். நடேசனல் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட இச்சட்டப் பிரச்சினை சம்பந்தமான தஸ்தாவேஜ் ஒன்றும் ஆணையாளரிடம் மேயர் கொடுத்தார்.

இக்கூட்டத்தில் எழுப்பப்பட்ட சட்டப் பிரச்சினை சம்பந்தமான முடிவை சட்ட ஆலோசனையைப் பெறும் பொருட்டு கூட்டத்தை ஒத்தி வைப்பதாக ஆணையாளர் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு எல்லா அங்கத்தினர்களும் சமூகமளித்திருந்தனர்.

## கிளிநொச்சியில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தன் பலநோக்குச் சங்கம்.

**சங்கீதம்**

1. எஸ். மங்கையர்க்கரசி கிளிநொச்சி சைவவித்தியாசாலை, 2. வி. சிவநாதன் ஜயந்திநகர், 3. எஸ். சிவதாசன் கனகபுரம்;

**நடனம்**

1. கிளிநொச்சி சைவவித்தியாசாலை, 2. குறத்தி நடனம், 3. கிராமிய நடனம்.

டமாஸ்கஸ், ஏப்ரல் 17

சிரியாவின் புதிய அரசாங்கம் அகமது அடாமாஸ் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது.

படைத் தளபதியும் ஒரு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆர். ஜி. யின் குற்றச்சாட்டுக்கு

### திரு. தொண்டமான் மறுப்பு

கொழும்பு, செவ்வாய்

சட்டவிரோதக் குடியேற்றத்திற்குத் தாம் உதவிபுரிவதாயும், சிங்களப் பெண்களுக்கு கருத்தடையில் ஊக்கமூட்டுவதாயும் தம்மீது திரு. ஆர். ஜி. சேனநாயகா பாராளுமன்றத்தில் தாம் இப்போது குற்றஞ்சாட்டியதாயும், இது அவரது அறியாமையையே காட்டுவதாயும் திரு. எஸ். தொண்டமான் பார்லிமெண்ட் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது பேசுகையில் கூறினர்.

"ஒரு அங்கத்தினர் இவ்விதம் அவதூறு செய்யப்பட்டும் சபாநாயகர் இதில் தலையிடாதது குறித்து ஆட்சேபனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் இயக்கத்தில் திரு. ஆர். ஜி.யை இளம் பெண்கள் சூழ்ந்திருந்தது அனைவருக்கும் தெரியும். தனது சட்டவிரோத நடவடிக்கைகளை மறைப்பதற்காக திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பெண்களுக்கு கருத்தடையை ஊக்கமூட்டியிருக்கக் கூடும்" என்றும் திரு. தொண்டமான் குறிப்பிட்டார்.

### குத்தகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் 72 நம்பர் திருவளர் நிலயம் என்னும் காணியில் பின்பககமாக ஒரு பகுதி மாட்டுப் பண்ணை நடத்தவோ அல்லது ஏதும் கைத்தொழில்லெள், வியாபாரங்கள் நடத்துவதற்கோ உபயோகப்படுத்தக்கூடியது.சுமார் 14 பரப்புக் காணி குத்தகைக்கு உண்டு—விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்—மு. குமாரசாமி, 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் : 420

### தேவை

யாழ் பீடாக்கடைக்கு சிறு பையன்கள் வேலைக்குத்தேவை. பெற்ரேருடன் நேரில் வரவும். யாழ் பீடா, 163, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

### "சமாதான சகவாழ்வு"

சோவியத் தூதுவராலய முதல் காரியதரிசியின் சிறப்புச் சொற்பொழிவு

17-4-62 லிருந்து 21-4-62 வரை இலங்கை சோவியத் தூதுவராலயத்தின் முதல்காரியதரிசியினதும், பாரியாரினதும் வட பிரதேசச் சுற்றுப் பிரயாணக் கூட்டத்தொடரின் முக்கிய கூட்டம் 18-4-62 புதன் கிழமை பி. ப. 4 மணிக்கு, யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

"சமாதான சகவாழ்வு" என்னும் பொருள்பற்றி காரியதரிசி அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணக்கிளை
இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம்.


இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)


கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்


## திருமண ஒத்திவைப்பு

மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. மு. வைத்திலிங்கம் அவர்களின் புத்திரனும் வேலணை மத்திய கல்லூரிஆசிரியருமான திரு. வி. வேலாயுதம்அவர்கட்கும் அராலி மேற்கைச் சேர்ந்த திரு. கே. விசுவலிங்கம் தம்பதிகளின் புத்திரி செல்வி லோகநாயகிக்கும் 20-4-62 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த திருமண வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்ரேம். எதிர்பாராதவிதமாகக் குடும்பத்தவர் ஒருவர் காலமாகியதால் திருமணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திருமணம் நடைபெறும் திகதியைப் பின்னர் அறிவிக்கின்ரேம்.

வி. வேலாயுதம்.
வி. லோகநாயகி.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது